## மாமன்றக் கூட்டம்

| | | |
|---|---|---|
| **கோப்பு எண்** | - | **ந.க.எண் 2244/2020/ எம்.சி. 8** |
| **நாள்** | - | **29.05.2020 காலை 11.00 மணி** |
| **தலைமை** | - | **திரு.ஜெ.ஷ்ரவன்குமார், இ.ஆ.ப.,<br>ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,<br>கோயம்புத்தூர் மாநகராட்சி** |
| **கலந்துகொண்டோர்** | - | **துணை ஆணையர்,<br>அனைத்து துறை தலைமைகள்,<br>அனைத்து மண்டல உதவி ஆணையர்கள்** |

---

## பொருள் எண் 1

கோயம்புத்தூர் மாநகராட்சி- கிழக்கு–மண்டலம் – வார்டு எண் 34 க்குட்பட்ட வீரியம்பாளையம் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியரின் கோரிக்கையின் அடிப்படையில் இப்பள்ளியில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த ஓட்டுகூரை கட்டிடத்தை அகற்றி இரண்டு புதிய வகுப்பறைகள் தலைமையசிரியர்அறை மற்றும் மாணவ மாணவிகளுக்கான கழிப்பிட கட்டிடங்களை கட்டுவதற்கு தி/ள்.ரோட்டரி கிளப் ஆப் ஸ்பெக்ட்ரம் சங்கம் கோயம்புத்தூர் கிழக்கு அவர்கள் சம்மதம் தெரிவித்து அதற்கான பணிகளை மேற்கொள்ள மாநகராட்சியின் அனுமதி வேண்டி கடந்த 10.03.2020-ம் தேதி கடிதம் வழங்கியுள்ளார். மேலும் வீரியம்பாளையம் மாநகராட்சி பள்ளியின் முன்னால் மாணவர் சங்கத்தினர் தனது 28.02.2020-ம் தேதிய கடிதத்தில் பழுதடைந்த பழைய கட்டிடத்தை தங்களது பொறுப்பில் இடித்து அப்புறபடுத்தி தருவதாக உறுதியளித்துள்ளார். மேற்கண்ட கடிதத்தின் அடிப்படையில் 06.03.2020-ல் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. விண்ணப்பதாரர் வழங்கியுள்ள உத்தேச கட்டிட வரைபடங்கள் மற்றும் கட்டுமான விபரங்கள் சரிபார்க்கப்பட்டது. எனவே, தி/ள்.ரோட்டரி கிளப் ஆப் பெக்ட்ரம் சங்கம் கோயம்புத்தூர் கிழக்கு அவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் 14-12-2019-ம் தேதிய கடிதத்தின்படி முன் அனுமதி பெறவும் அதன் அடிப்படையில் கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. பழைய கட்டிடத்தை முன்னாள் மாணவர்கள் சங்கம் மூலம் அப்புறப்படுத்தும் போது மறு உபயோக பொருட்களை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.
2. புதிதாக கட்டப்படும் கட்டிடம் கட்டிமுடித்தபின் மாநகராட்சிவசம் ஒப்படைக்கவேண்டும்.
3. புதிதாக கட்டப்படும் கட்டிடத்தில் தங்களது நிறுவனத்தின் பெயர் பொறிக்கக்கூடாது.
4. புதிதாக கட்டப்படும் கட்டிடத்திற்கு மண் பரிசோதனை (soil test) செய்து சான்று சமர்ப்பிக்கப்படவேண்டும்.
5. புதிதாக கட்டப்படும் கட்டிடத்திற்கு கட்டிடவடிவமைப்பு (structuraldesign) பெற்று பணி மேற்கொள்ளவேண்டும்.
6. மேற்கண்ட புதிதாக கட்டப்படும் கட்டுமானபணிகள்அனைத்தும் மாநகராட்சிபொறியாளர் அவர்களின் மேற்பார்வையில் மேற்க்கொள்ளப்படவேண்டும்.
7. புதிய கட்டிடம் கட்டுவதற்கான செலவுத் தொகையை முழுவதும் தனது செலவில் மேற்கொள்ளப்பட்டவேண்டும். மாநகராட்சி நிதியிலிருந்து எந்ததொகையும் வழங்கப்பட மாட்டாது.
8. பணிகள்மேற்கொள்ளும் போது அருகில் ஏற்கனவே உள்ள கட்டிடங்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படுத்தக் கூடாது. அவ்வாறு ஏற்பட்டால் மனுதாரர் தனது சொந்த செலவில் சரி செய்து கொடுக்க வேண்டும்.
9. பொது மக்களுக்கும், பள்ளி மாணவர்களுக்கும் எவ்வித இடையூறும் ஏற்படாதவாறு பணியினை மேற்கொள்ள வேண்டும்.
10. கூடுதல் வகுப்பறைக் கட்டடப்பணிகள் துவங்கிய தினத்திலிருந்து 4 மாதங்களுக்குள்முழுமையாக பணி நிறைவு செய்து மாணவ, மாணவிகள் பயன்பாட்டில் இருக்க வேண்டும்.
11. புதிதாக கட்டப்படும் வகுப்பறை கட்டிடத்தின் SitePlan ,கட்டிட வரைபடங்கள் மற்றும் Structural Drawings தயாரித்து மாநகராட்சி பொறியாளரிடம் ஒப்புதல் பெற்ற பிறகே பணி மேற்கொள்ள வேண்டும்.
12. அரசால் அனுமதி அளிக்கப்பட்ட ஆய்வகங்களில் கண்டிப்பாக கட்டடப் பணிக்கான இடத்தின் மண் தன்மை குறித்த மண் பரிசோதனை செய்து சான்று பெற்று பள்ளியில் வைத்திருக்க வேண்டும்.

13. அனைத்து கட்டிட பணிகளுக்கும் பயன்படுத்தப்படும் கட்டிடப் பொருட்கள் தர பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அதற்கான பதிவேட்டில் பதியப்பட வேண்டும்.
14. கட்டடத்தின் வரைப்படத்தில் எவ்வித மாற்றங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
15. கட்டுமானப் பணி எந்தவொரு ஒப்பந்த அடிப்படையிலும் மேற்க்கொள்ளக்கூடாது.
16. அனைத்து கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு கட்டாயம் அமைக்கப்படுதல் வேண்டும்.
17. புதிய கட்டடங்கள் அனைத்திலும் தீயணைப்பான் (Fire Extinguisher) பொருத்தப்படவேண்டும். (ஒரு கட்டடத்திற்கு ஒரு தீயணைப்பான் )
18. அனைத்து பொருட்களும் ISI முத்திரையுடன் கூடிய பொருட்களாக இருக்க வேண்டும்.
19. புதியவகுப்பறை கட்டடப்பணி சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியரால் சுட்டிக்காட்டப்படும் இடத்தில் தான் கட்டப்படும். மேலும் கட்டிடம் கட்டும் இடத்தில் இடம் சம்பந்தமான பிரச்சனை ஏதும் இருந்தால் அதற்கு முழுப் பொறுப்பும் தலைமையாசிரியரையேசாரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.
20. பணி நிறைவு செய்த பின்னர் அப்பணிக்கான புகைப்படத்துடன் கூடிய பயனீட்டுச் சான்றிதழை (Utilization Certificate) மாநகர பொறியாளரிடம் ஒப்புதல் பெற்று ஆணையாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.
21. கட்டுமானப் பணியின்போது மாணவர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் பொது மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டும்.
22. கட்டுமானப் பணியின்போது பாதுகாப்பு உபகரணங்கள் தவறாது அணிந்து கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள வேண்டும்.
23. கட்டுமானப் பணிகள்மேற்கொள்ளும் போது பாதுகாப்பு சார்ந்த அறிவிப்பு பலகை வைக்கப்பட வேண்டும்.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண் : 2486 /2020/டி1கி

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 254 நாள் 29.05.2020</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - வார்டு எண் 34-க்குட்பட்ட வீரியம்பாளையம் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் அறிவியல் மற்றும் கணினி ஆய்வகம் ஏற்கனவே உள்ள கட்டிடத்தின் மேல் தளத்தில் கட்டித்தர தி/ள். ரோட்டரி சங்கம் கோயம்புத்தூர் கிழக்கு அவர்கள் அனுமதி கோரி விண்ணப்பம் செய்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட வீரியம்பாளையம் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியின் முதல் தளத்தில் அறிவியல் மற்றும் கணினி ஆய்வகம் கட்டுமானப்பணிகளை மேற்கொள்ளுவது தொடர்பாக கள ஆய்வு மற்றும் தொழில்நுட்ப விபரங்கள் சரிபார்க்கப்பட்டதும் உத்தேச கட்டிடம் கட்ட சாத்தியக் கூறுகள் உள்ளதால் முதல் தளத்தில் அறிவியல் மற்றும் கணினி ஆய்வகம் கட்டுவதற்கு கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள தி/ள். ரோட்டரி சங்கம் கோயம்புத்தூர் கிழக்கு அவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் 14-12-2019-ம் தேதிய கடிதத்தின்படி முன் அனுமதி பெறவும் அதன் அடிப்படையில் கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்</u>**

1. புதிதாக கட்டப்படும் கட்டிடம் கட்டிமுடித்தபின் மாநகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும்.
2. புதிதாக கட்டப்படும் கட்டிடத்தில் தங்களது நிறுவனத்தின் பெயர் பொறிக்கக்கூடாது.
3. புதிதாக கட்டப்படும் கட்டிடத்திற்கு மண் பரிசோதனை (soil test) செய்து சான்று சமர்ப்பிக்கப்படவேண்டும்.
4. புதிதாக கட்டப்படும் கட்டிடத்திற்கு கட்டிட வடிவமைப்பு(structuraldesign) பெற்று பணி மேற்கொள்ளவேண்டும்.
5. மேற்கண்ட புதிதாக கட்டப்படும் கட்டுமான பணிகள் அனைத்தும் மாநகராட்சி பொறியாளர் அவர்களின் மேற்பார்வையில் மேற்க்கொள்ளப்பட வேண்டும்.
6. புதிய கட்டிடம் கட்டுவதற்கான செலவுத் தொகையை முழுவதும் தனது செலவில் மேற்கொள்ளப்பட்ட வேண்டும். மாநகராட்சி நிதியிலிருந்து எந்த தொகையும் வழங்கப்பட மாட்டாது.

7. பணிகள் மேற்கொள்ளும் போது ஏற்கனவே உள்ள கட்டிடங்களுக்கு எந்த விதபாதிப்பும் ஏற்படுத்தக்கூடாது. அவ்வாறு ஏற்பட்டால் மனுதாரர் தனது சொந்த செலவில் சரி செய்து கொடுக்க வேண்டும்.
8. பொது மக்களுக்கும், பள்ளி மாணவர்களுக்கும் எவ்வித இடையூறும் ஏற்படாதவாறு பணியினை மேற்கொள்ளவேண்டும்.
9. கூடுதல் வகுப்பறைக் கட்டிடப் பணிகள் துவங்கிய தினத்திலிருந்து 4 மாதங்களுக்குள் முழுமையாக பணி நிறைவு செய்து மாணவ, மாணவிகள்பயன்பாட்டில் இருக்க வேண்டும்.
10. புதிதாக கட்டப்படும் வகுப்பறை கட்டிடத்தின் Site Plan ,கட்டிட வரைப்படங்கள் மற்றும் Structural Drawings தயாரித்து மாநகராட்சி பொறியாளரிடம் ஒப்புதல் பெற்ற பிறகே பணிமேற்கொள்ள வேண்டும்.
11. அனைத்து கட்டிட பணிகளுக்கும் பயன்படுத்தப்படும் கட்டிடப் பொருட்கள் தர பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அதற்கான பதிவேட்டில் பதியப்பட வேண்டும்.
12. கட்டடத்தின் வரைப்படத்தில் எவ்வித மாற்றங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
13. கட்டுமானப் பணி எந்தவொரு ஒப்பந்த அடிப்படையிலும் மேற்க்கொள்ளக்கூடாது.
14. அனைத்து கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு கட்டாயம் அமைக்கப்படுதல் வேண்டும்.
15. புதியகட்டடங்கள் அனைத்திலும் தீயணைப்பான் (Fire Extinguisher) பொருத்தப்பட வேண்டும். (ஒரு கட்டடத்திற்கு ஒரு தீயணைப்பான் )
16. அனைத்து பொருட்களும் ISI முத்திரையுடன் கூடிய பொருட்களாக இருக்க வேண்டும்.
17. கட்டுமான பணிகள் நடைபெறும்போது ஒவ்வொரு நிலையிலும் புகைப்படம் எடுக்கப்பட்டு பணி முடிவடைந்தவுடன் புகைப்படத்தொகுப்பு மற்றும் பயனீட்டு சான்றிதழ் ஆகியவற்றை மாநகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
18. பணி நிறைவு செய்த பின்னர் அப்பணிக்கான புகைப்படத்துடன் கூடிய பயனீட்டுச் சான்றிதழை (Utilization Certificate) மாநகரபொறியாளரிடம் ஒப்புதல் பெற்று ஆணையாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.
19. கட்டுமானப் பணியின் போது மாணவர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் பொது மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டும்.
20. கட்டுமானப் பணியின்போது பாதுகாப்பு உபகரணங்கள் தவறாது அணிந்து கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள வேண்டும்.
21. கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளும் போதுபாதுகாப்புசார்ந்த அறிவிப்பு பலகை வைக்கப்பட வேண்டும்.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண் : 3012 /2020/டி1கி

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 255 நாள் 29.05.2020</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 3**

கோயம்புத்துார் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண் **54** ரங்கநாதபுரம் மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் பணிக்கு மதிப்பீடு **ரூ.52,00,000/-**க்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் **ந.க.எண்.2063/2020/எம்.டி.5**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 256 நாள் 29.05.2020</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 4**

கோயம்புத்துார் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண் **82**க்குட்பட்ட- கோட்டை மாநகராட்சி நடுநிலை பள்ளியில் வகுப்பறை கட்டிடம் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு **ரூ.41,00,000/-**க்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் **ந.க.எண்.2064/2020/எம்.டி.5**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 257 நாள் 29.05.2020</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 5**

கோயம்புத்தூர் மாநகராட்சி–ஒப்பந்ததாரர் M/s. Vardhan Infraastructure, நெ.54 , 8 குறுக்கு வீதி, திருமகள் நகர், பீளமேடு புதூர், கோவை – 641 004 அவர்கள் 10/04/2020 தேதியிட்ட கடிதத்தில் தங்களது நிறுவனத்தை M/s. EK Infrastructure Pvt, Ltd, SY No. 153/5, ரவி பிரதான சாலை, பொன்னியம்மன் கோவில் அருகில், வடக்கு பட்டு பிரதான சாலை, சென்னை – 600 100 என்ற நிறுவனம் கடந்த 13/02/2020 அன்று முறைப்படி முழுவதுமாக கையப்படுத்தியுள்ளது என தெரிவித்துள்ளார்கள். அதற்குரிய அனைத்து சான்றுகளையும் அக்கடிதத்துடன் சமர்ப்பித்துள்ளனர்.

மேலும் M/s. EK Infrastructure Pvt Ltd, நிறுவனமும் 10/04/2020 தேதியிட்ட கடிதத்தில் நாங்கள் M/s. Vardhan Infraastructure நிறுவனத்தை முழுவதுமாக கையப்படுத்தியுள்ளோம் என்ற தகவலை வழங்கி உறுதி செய்துள்ளனர். மேலும் இக்கடிதத்தில் M/s. Vardhan Infraastructure ஒப்பந்தம் மேற்கொண்டு எடுத்து வைத்துள்ள பணிகளில் நிலுவையுள்ள அனைத்து பணிகளையும் இனி வரும் காலங்களில் M/s. EK Infrastructure Pvt Ltd, நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படும் என்றும் மேலும் M/s. Vardhan Infraastructure நிறுவனத்தை M/s. EK Infrastructure Pvt Ltd, என்ற நிறுவனம் 13/02/2020 அன்று முழுவதுமாக கையகப்படுத்திவிட்டதால், இனிவரும் நிதியாண்டு முதல் M/s.Vardhan Infraastructure நிறுவனத்தின் பெயரிலுள்ள அனைத்து பணிகளுக்கும் Income Tax TDS, GST TDS யை M/s. EK Infrastructure Pvt Ltd, PAN Number மற்றும் GST Number –ல் செலுத்திடவும் மேலும் M/s.Vardhan Infraastructure நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட பழைய டேவணித்தொகை (EMD) மற்றும் வைப்புத் தொகை (FSD) பெற்றுக்கொண்டு அதற்கு பதிலாக அதே தொகைக்கு M/s. EK Infrastructure Pvt Ltd, பெயரில் புதியதாக டேவணித்தொகை (EMD) மற்றும் வைப்புத் தொகை (FSD) வழங்குகிறோம் என்று இரு நிறுவனமும் கோரியுள்ளார்கள்.

மேற்கொண்ட கோரிக்கைகளை பரிசீலனை செய்து உரிய சட்டகருத்துரு வழங்க மாநகராட்சி நிலைகுழு வழக்கறிஞடம் உரிய சட்ட கருத்துரு பெற 05/05/2020 தேதியிட்ட கடிதம் அனுப்பபட்டு மாநகராட்சி நிலை குழு வழக்கறிஞர் அவர்கள் 07/05/2020 நாளிட்ட அக்கடிதத்தில் கீழ்கண்டவாறு தனது கருத்தினை வழங்கியுள்ளார்.

இதுநாள்வரை மேற்சொன்ன M/s. Vardhan Infraastructure நிறுவனத்திடம் வியாபார வரவு செலவு செய்து வந்த அரசு நிறுவனங்கள், மாநகராட்சிகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் இனி மேற்கொண்ட அதே வியாபார வரவு செலவுகளை M/s. EK Infrastructure Pvt Ltd, என்ற நிறுவனத்திடம் தொடர்ந்து நடத்தி கொள்ள எந்தவிதமான சட்டப்பூர்வ தடை இல்லை. அதேபோல் M/s. Vardhan Infraastructure என்ற நிறுவனம் கோவை மாநகராட்சியுடன் ஏற்படுத்திகொண்ட நிலுவையில் உள்ள ஒப்பந்த பணிகளின் டேவணித்தொகை (EMD) மற்றும் வைப்புத் தொகை (FSD) ஆகியவற்றை கொடுத்து வரும் நிதியாண்டு முதல் அவற்றை திரும்ப கொடுத்து விட்டு தற்போதைய புதிய நிறுவனமான M/s. EK Infrastructure Pvt Ltd, பெயரில் கோவை மாநகராட்சி பெற்று கொள்வதிலும் எந்தவிதமான சட்ட தடங்கலும் இல்லை எனவும் மாநகராட்சி நிலை குழு வழக்கறிஞர் சட்ட கருத்துரு வழங்கியுள்ளார்.

எனவே இதனை ஏற்று மேற்கண்ட பெயர் மாற்றத்தினை அங்கீகரிக்க வேண்டி மாமன்ற பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண். 1922/2020/TA(M)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 258 நாள் 29.05.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 6**

கோயம்புத்தூர் மாநகராட்சி–ஒப்பந்ததாரர் M/s. Constronics India,நெ.17/1,G-1 தரைதளம், SVR பில்டர்ஸ், புவனேஸ்வரி நகர், 1st பிரதான சாலை, வேளச்சேரி, சென்னை – 600 042 . அவர்கள் 10/04/2020 தேதியிட்ட கடிதத்தில் தங்களது நிறுவனத்தை M/s. Harrsha Infra Cons Private Ltd, No.258/4A,Z பிளாக், 6வது வீதி, அண்ணா நகர், சென்னை – 600 040 என்ற நிறுவனம் கடந்த 13/02/2020 அன்று முறைப்படி முழுவதுமாக கையப்படுத்தியுள்ளது என தெரிவித்துள்ளார்கள். அதற்குரிய அனைத்து சான்றுகளையும் அக்கடிதத்துடன் சமர்ப்பித்துள்ளனர்.

மேலும் M/s. Harrsha Infra Cons Private Ltd, நிறுவனமும் 10/04/2020 தேதியிட்ட கடிதத்தில் நாங்கள் M/s. Constronics India நிறுவனத்தை முழுவதுமாக கையப்படுத்தியுள்ளோம் என்ற தகவலை வழங்கி உறுதி செய்துள்ளனர். மேலும் இக்கடிதத்தில் M/s. Constronics India ஒப்பந்தம் மேற்கொண்டு எடுத்து வைத்துள்ள பணிகளில் நிலுவையுள்ள அனைத்து பணிகளையும் இனி வரும் காலங்களில் M/s. Harrsha Infra Cons Private Ltd, நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படும் என்றும் மேலும் M/s. Constronics India நிறுவனத்தை M/s. Harrsha Infra Cons Private Ltd, என்ற நிறுவனம் 13/02/2020 அன்று முழுவதுமாக கையகப்படுத்திவிட்டதால், இனிவரும் நிதியாண்டு முதல் M/s.Constronics India நிறுவனத்தின் பெயரிலுள்ள அனைத்து பணிகளுக்கும் Income Tax TDS, GST TDS யை M/s. Harrsha Infra Cons Private Ltd, PAN Number மற்றும் GST Number–ல் செலுத்திடவும் மேலும் M/s.Constronics India நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட பழைய டேவணித்தொகை (EMD) மற்றும் வைப்புத் தொகை (FSD) பெற்றுக்கொண்டு அதற்கு பதிலாக அதே தொகைக்கு M/s. Harrsha Infra Cons Private Ltd, பெயரில் புதியதாக டேவணித்தொகை (EMD) மற்றும் வைப்புத் தொகை (FSD) வழங்குகிறோம் என்று இரு நிறுவனமும் கோரியுள்ளார்கள்.

மேற்கொண்ட கோரிக்கைகளை பரிசீலனை செய்து உரிய சட்டகருத்துரு வழங்க மாநகராட்சி நிலைகுழு வழக்கறிஞடம் உரிய சட்ட கருத்துரு பெற 05/05/2020 தேதியிட்ட கடிதம் அனுப்பபட்டு மாநகராட்சி நிலை குழு வழக்கறிஞர் அவர்கள் 07/05/2020 நாளிட்ட அக்கடிதத்தில் கீழ்கண்டவாறு தனது கருத்தினை வழங்கியுள்ளார்.

இதுநாள்வரை மேற்சொன்ன M/s. Constronics India நிறுவனத்திடம் வியாபார வரவு செலவு செய்து வந்த அரசு நிறுவனங்கள், மாநகராட்சிகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் இனி மேற்கொண்ட அதே வியாபார வரவு செலவுகளை M/s. Harrsha Infra Cons Private Ltd என்ற நிறுவனத்திடம் தொடர்ந்து நடத்தி கொள்ள எந்தவிதமான சட்டப்பூர்வ தடை இல்லை. அதே போல் M/s. Constronics India என்ற நிறுவனம் கோவை மாநகராட்சியுடன் ஏற்படுத்திகொண்ட நிலுவையில் உள்ள ஒப்பந்த பணிகளின் டேவணித்தொகை (EMD) மற்றும் வைப்புத் தொகை (FSD) ஆகியவற்றை கொடுத்து வரும் நிதியாண்டு முதல் அவற்றை திரும்ப கொடுத்து விட்டு தற்போதைய புதிய நிறுவனமான M/s. Harrsha Infra Cons Private Ltd பெயரில் கோவை மாநகராட்சி பெற்று கொள்வதிலும் எந்தவிதமான சட்ட தடங்கலும் இல்லை எனவும் மாநகராட்சி நிலை குழு வழக்கறிஞர் சட்ட கருத்துரு வழங்கியுள்ளார்.

எனவே இதனை ஏற்று மேற்கண்ட பெயர் மாற்றத்தினை அங்கீகரிக்க வேண்டி மாமன்ற பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண். 1923/2020/TA(M)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 259 நாள் 29.05.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலம், வார்டு எண்.76-க்குட்பட்ட பேரூர் பிரதான சாலையில் நெடுஞ்சாலைத் துறை மூலம் சாலை விரிவாக்கம் பணி நடைபெற்று வருவதால், பேரூர் பிரதான சாலையில் கீழ்கண்ட அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள கீழ்க்கண்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்,

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 76 | வார்டு எண் 76 - வார்டுக்குட்பட்ட பேரூர் பிரதான சாலையில் சிவாலயா மஹால் முதல் பாரதி சாலை சந்திப்பு வரை மையத் திட்டு தெரு விளக்குகள் அமைத்தல்<br>ந.க.எண். 2078 /2020/ எம்.டி 4 | 61.75 |
| | | **மொத்தம்** | **61.75** |

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நிர்வாக அனுமதி வேண்டி பொருள் பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.2078/2020/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 260 நாள் 29.05.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலம், வார்டு எண்.76-க்குட்பட்ட பேரூர் பிரதான சாலையில் நெடுஞ்சாலைத் துறை மூலம் சாலை விரிவாக்கம் பணி நடைபெற்று வருவதால், பேரூர் பிரதான சாலையில் கீழ்கண்ட அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள கீழ்க்கண்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்,

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 76 | வார்டு எண் 76 - வார்டுக்குட்பட்ட பேரூர் பிரதான சாலையில் பாரதி சாலை சந்திப்பு முதல் நொய்யல் ஆற்றுப் பாலம் வரை மையத் திட்டு தெரு விளக்குகள் அமைத்தல்<br>ந.க.எண். 2079 /2020/ எம்.டி 4 | 63.70 |
| | | **மொத்தம்** | **63.70** |

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நிர்வாக அனுமதி வேண்டி பொருள் பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.2079/2020/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 261 நாள் 29.05.2020**

அனுமதிக்கப்பட்டது.

## பொருள் எண் 9

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 89 க்குட்பட்ட வாய்க்கால்பாளையம் பகுதியில் உள்ள சமுதாய கூடத்திற்கு வெண்டிலேசன் அமைத்தல் மற்றும் கூடுதல் அபிவிருத்தி பணிகள் செய்தல், பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 89 | வார்டு எண் 89 க்குட்பட்ட வாய்க்கால்பாளையம் பகுதியில் உள்ள சமுதாய கூடத்திற்கு வெண்டிலேசன் அமைத்தல் மற்றும் கூடுதல் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 17.80 |

மேற்படி பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.2183/2020/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 262 நாள் 29.05.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண் 38 ரொட்டிக்கடை மைதானம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைஎண் 1 மற்றும் 2க்கு நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி - கோரியது – உச்ச ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு ஒப்படை செய்தல் - தொடர்பாக

********

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 38ல் ரொட்டிக்கடை மைதானம் பகுதியில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள கடை எண் 1மற்றும் 2 ஆகிய இரண்டு கடைகளுக்கு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 13.03.2020-ம் தேதியில் நடைபெற்றது. இதில் கடை எண்கள் 1 மற்றும் 2-க்கு தலா ஒருவர் மட்டும் பங்கு கொண்டனர். ஏலம் கோர முன்வரவில்லை. கீழ்குறிப்பிட்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் பெறப்பட்டுள்ளது.

கடை எண் 1 183-சதுரடி (அரசு மதிப்பு ரூ.5612/-)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 13.03.2020 ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி (ரூ) |
|---|---|---|
| 1 | திருமதி.கவிதா.G | ரூ.6200/- |

மேற்படி கடை எண் 1 க்கு திருமதி.கவிதா.G என்பவர் உயர்ந்தபட்சமாக ரூ.6200/-க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

கடை எண் 2 183-சதுரடி (அரசு மதிப்பு ரூ.5612/-)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 13.03.2020 ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி (ரூ) |
|---|---|---|
| 1 | திருமதி.கவிதா.G | ரூ.6200/- |

மேற்படி கடை எண் 2-க்கு திருமதி.கவிதா.G என்பவர் உயர்ந்தபட்சமாக ரூ.6200/ க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

மேற்படி கடை எண் 1 மற்றும் 2-க்கு பெறப்பட்டுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையானது மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்டிருந்த அரசுமதிப்பினை காட்டிலும் கூடுதல் ஆகும். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்று 1.04.2020 முதல் 31.03.2023 வரை மூன்றாண்டுகளுக்கு உரிமம் ஒப்படை செய்வதற்கு மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 8035/2019/அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 263 நாள் 29.05.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 11

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் கணபதி குடிநீர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோர நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமா்பிக்கப்படுகிறது.

| வ. எண் | ந.க.எண் | பணியின் பெயா் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|---|
| 1. | 2233/20/எம்டி2 | வடக்கு மண்டலம் கணபதி குடிநீா் பிரிவு பில்லூா் இரண்டாம் திட்டம் வெள்ளியங்காடு குடிநீா் சுத்தீகரிப்பு நிலையம் முதல் கணபதி குடிநீா் மேல்நிலை தொட்டி வரையிலான 1500மி.மீ விட்டமுள்ள குடிநீா் கொணரும் குடிநீா் பிரதான குழாயினை ஓராண்டிற்கு பராமரித்தல் பணிசெய்தல் | 26,65,000/- |

அலுவலககுறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண.2233 /2020/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 264 நாள் 29.05.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - 2019–2022 மூன்றாண்டுகளுக்கான வருடாந்திர குத்தகை இனங்களுக்கு - 28.06.2019 அன்று நடைபெற்ற பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அரசு மதிப்பை காட்டிலும் - கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட குத்தகை இனங்கள் ஒப்படை செய்யப்பட்டமைக்கு மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டுவது - தொடா்பாக.

பாா்வை : ஆணையாளா் மற்றும் தனிஅதிகாரி அவா்களின் உத்திரவு நாள்.19.07.2019. மற்றும் 10.10.2019.

*************

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் குத்தகை இனங்களுக்கு 28.06.2019-ம் தேதி 2019-2022-ம் ஆண்டிற்கு முதன் முறையாக பொதுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

(அ)

| வ. எண் | இனம் | ஏலதாரா் பெயா் | 28.06.2019-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயா்ந்தபட்ச ஏலத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | சக்திரோடு ஆடு மாடு அறுவைமனை கட்டணம் வசூலிக்கும் உரிமம் அரசுநிா்ணய மதிப்பீடு ரூ.9,00,286/- | திரு.A.அஸ்கா்அலி | 15,00,000/- (ஒப்பந்தப்புள்ளி) |
| | | திரு.M.Y.அஸ்லாம் பாஷா | 12,00,000/- (ஒப்பந்தப்புள்ளி) |
| | | திரு.யாகூப்கான் | 14,56,299/- (ஒப்பந்தப்புள்ளி) |

மேற்படி இனத்திற்கு மூன்று பேர் கலந்து கொண்டார்கள். திரு.A.அஸ்கர்அலி அவர்களிடமிருந்து உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி 15,00,000/- அரசு மதிப்பீட்டு தொகையை விட ரூ.5,99,714/- கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

(ஆ)

| வ. எண் | இனம் | ஏலதாரர் பெயர் | 28.06.2019-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 2 | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம். அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.4,75,089/- | திரு.R.பாஸ்கர் | 4,80,000/- (ஒப்பந்தப்புள்ளி) |

இவ்வினத்திற்கு திரு.R.பாஸ்கர் அவர்கள் மட்டுமே கலந்துகொண்டார். அவர்களிடமிருந்து உயர்ந்தப்பட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ.4,80,000/- பெறப்பட்டுள்ளது. அரசு மதிப்பீட்டு தொகையை விட ரூ.4,911/- கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

(இ)

| வ. எண் | இனம் | ஏலதாரர் பெயர் | 28.06.2019-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 3 | வ.உ.சி.பூங்கா வளாகம் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.3,54,233/- | திரு.P.J.பாபு | 1,28,115/- (ஒப்பந்தப்புள்ளி) |
| | | திரு.சந்திரன் | 4,35,000/- (ஒப்பந்தப்புள்ளி) |
| | | திரு.கிருஷ்ணன் | 4,69,800/- (ஒப்பந்தப்புள்ளி) |

மேற்படி இனத்திற்கு மூன்றுபேர் கலந்து கொண்டார்கள். திரு.கிருஷ்ணன் அவர்களிடமிருந்து உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி 4,69,800/- பெறப்பட்டுள்ளது. அரசு மதிப்பீட்டு தொகையை விட ரூ.1,15,567/- கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

(ஈ)

| வ. எண் | இனம் | ஏலதாரர் பெயர் | 28.06.2019-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 | உக்கடம் பேருந்து நிலையம் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.16,56,562/- | திரு.S.முகமது ர.ஃபிக் | 14,00,000/- (ஒப்பந்தப்புள்ளி) |
| | | திரு.V.K.ரஹமத்துல்லா | 16,60,000/- (ஒப்பந்தப்புள்ளி) |

மேற்படி இனத்திற்கு இரண்டு பேர் கலந்து கொண்டார்கள். திரு.V.K.ரஹமத்துல்லா அவர்களிடமிருந்து உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ.16,60,000/- பெறப்பட்டுள்ளது. அரசுமதிப்பீட்டு தொகையை விட ரூ.3,438/- கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

(உ)

| வ. எண் | இனம் | ஏலதாரர் பெயர் | 28.06.2019-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 5 | உக்கடம் பேருந்து நிலையம் பொருள் காப்பகம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.2,14,161/- | திரு.S.முகமது ர.ஃபிக் | 2,10,000/- (ஒப்பந்தப்புள்ளி) |
| | | திரு.V.K.ரஹமத்துல்லா | 2,20,000/- (ஒப்பந்தப்புள்ளி) |

மேற்படி இனத்திற்கு இரண்டு பேர் கலந்து கொண்டார்கள். திரு.V.K.ரஹமத்துல்லா அவர்களிடமிருந்து உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி 2,20,000/- பெறப்பட்டுள்ளது. அரசுமதிப்பீட்டு தொகையை விட ரூ.5,839/- கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

(ஊ)

| வ. எண் | இனம் | ஏலதாரர் பெயர் | 28.06.2019-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 6 | தியாகி குமரன் மார்க்கெட் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.10,78,096/- | திருமதி.J.புவனேஸ்வரி | 11,00,555/- (ஒப்பந்தப்புள்ளி) |
| | | திரு.S.மூர்த்தி | 9,00,000/- (ஒப்பந்தப்புள்ளி) |

மேற்படி இனத்திற்கு இரண்டு பேர் கலந்து கொண்டார்கள். திருமதி.J.புவனேஸ்வரி அவர்களிடமிருந்து உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி 11,00,555/- பெறப்பட்டுள்ளது. அரசுமதிப்பீட்டு தொகையை விட ரூ.22,459/- கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

(எ)

| வ. எண் | இனம் | ஏலதாரர் பெயர் | 28.06.2019-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 7 | இராமர் கோவில் வீதி மார்க்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமம். அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.37,29,868/- | திரு.S.முகமது ர.ஃபிக் | 37,50,100/- (ஒப்பந்தப்புள்ளி) |
| | | திரு.S.S.கிருஷ்ணமூர்த்தி | 30,00,000/- (ஒப்பந்தப்புள்ளி) |

மேற்படி இனத்திற்கு இரண்டு பேர் கலந்து கொண்டார்கள். திரு.S.முகமது ர.ஃபிக் அவர்களிடமிருந்து உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ.37,50,100/- பெறப்பட்டுள்ளது. அரசுமதிப்பீட்டு தொகையை விட ரூ.20,232/- கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

(ஏ)

| வ. எண் | இனம் | ஏலதாரர் பெயர் | 28.06.2019-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 8 | தியாகி குமரன் மார்க்கெட்டில் தரை கடைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் தியாகி குமரன் மார்க்கெட்டிற்கு மேட்டுப்பாளையம் சாலை மொத்த வியாபார மண்டியிலிருந்து வரும் சரக்கு வண்டிகளை தவிர மற்ற பகுதியிலிருந்து வரும் சரக்கு வண்டிகளுக்கு கட்டணம் வசூலிக்கும் (மாநகராட்சி நிரந்தர கடைகள் நீங்லாக) உரிமம், மற்றும் தென்வடல் ரோட்டில் இரண்டு சக்கர வாகனம் நிறுத்துமிடம் (4891 சதுரடி) நீங்கலாக. அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.35,36,000/- | திரு.A.K.சுல்தான் அமீது | 35,50,000/- (ஒப்பந்தப்புள்ளி) |
| | | திரு.R.சுப்ரமணி | 29,00,000/- (ஒப்பந்தப்புள்ளி) |
| | | திரு.S.முகமது ர.ஃபிக் | 30,00,000/- (ஒப்பந்தப்புள்ளி) |
| | | திரு.M.A.குத்புதீன் | 28,00,000/- (ஒப்பந்தப்புள்ளி) |
| | | திரு.M.உமர் அலி | 34,00,000/- 30,00,000/- (ஒப்பந்தப்புள்ளி) |
| | | திரு.M.செல்வம் | 29,00,000/- (ஒப்பந்தப்புள்ளி) |
| | | திரு.K.M.அன்வர்தீன் | ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை |

மேற்படி இனத்திற்கு ஏழு பேர் கலந்து கொண்டார்கள். திரு.A.K.சுல்தான்அமீது அவர்களிடமிருந்து உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ.35,50,000/- பெறப்பட்டுள்ளது. அரசுமதிப்பீட்டு தொகையை விட ரூ.14,000/- கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

பார்வையில் காணும் ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி அவர்களின் அனுமதி பெற்று ஒப்படைக்கப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.6600 / 18 / அ7 (ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 265 நாள் 29.05.2020**

அனுமதிக்கப்பட்டது.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

## பொருள் எண் 13

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.82 என்.எச்.ரோடு-II, III நடைபாதை கடைகள் - மற்றும் பிரதான அலுவலகம் பெரிய கடைவீதி அலுவலக கட்டிடங்கள் - ஒதுக்கீடு செய்யப்பட்டு - மூன்று ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்து – உரிமம் புதுப்பித்தல் - தொடர்பாக

பார்வை :
1. அரசாணை எண். 147 ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.
2. அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.
3. மாமன்ற தீர்மான எண்.264 நாள். 20.11.2017.

*********

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்ட வணிக வளாக கடைகளுக்கு பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணைகளின்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீட்டித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள் 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92–நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07–ன் படி உரிமம் புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யவும் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசாணையின் படி பொதுப்பணித்துறை வாடகை மதீப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி கீழ்குறிப்பிட்ட கடைகளுக்கு 31.03.2019-யுடன் மூன்றாண்டுகள் முடிவடைந்தததால் 01.04.2019 முதல் 31.03.2022 வரை 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யப்பட வேண்டும் .

**(அ) என்.எச்.ரோடு - II (பழைய கடைகள்)**

| வ. எண் | வரி விதிப்பு எண் | கடை எண் | பெயர் | கடையின் அளவு | மொத்த ச.அடி | பொதுப்பணித்துறை வாடகை மதிப்பீட்டின் படி உயர்வு செய்யப்பட்டு தற்போது செலுத்தி வரும் மாத வாடகை ரூ. | உரிமம் புதிப்பிக்கப்பட வேண்டி நாள். | | 01.04.2019 முதல் 15 சதவீதம் உயர்வு செய்யப்பட வேண்டிய மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | முதல் | முடிய | |
| 1 | 8231690 | 2 | டி.எம்.முகம்மது இலியாஸ் | 13.5 x 10.5 | 141.75 | 2282 | 01.04.2019 | 31.03.2022 | 2624 |
| 2 | 8231211 | 3 | கே.எஸ்.மாதவன் | 11 x 13.75 | 151.25 | 8918 | 01.04.2019 | 31.03.2022 | 10256 |
| 3 | 8231212 | 4 | எஸ்.மனோகரன் | 11 x 13.75 | 151.25 | 8918 | 01.04.2019 | 31.03.2022 | 10256 |
| 4 | 8231213 | 5 | வி.பத்மனாபன் | 11 x 13.75 | 151.25 | 8918 | 01.04.2019 | 31.03.2022 | 10256 |
| 5 | 8231214 | 6 | ஹனீ∴பா | 11 x 13.75 | 151.25 | 8918 | 01.04.2019 | 31.03.2022 | 10256 |

**(அ) என்.எச்.ரோடு - III (புதிய கடைகள்)**

| வ. எண் | வரி விதிப்பு எண் | கடை எண் | பெயர் | கடையின் அளவு | மொத்த ச.அடி | பொதுப்பணித்துறை வாடகை மதிப்பீட்டின் படி உயர்வு செய்யப்பட்டு தற்போது செலுத்தி வரும் மாத வாடகை ரூ. | உரிமம் புதிப்பிக்கப்பட வேண்டி நாள். முதல் | முடிய | 01.04.2016 முதல் 15 சதவீதம் உயர்வு செய்யப்பட வேண்டிய மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8231210 | 2 | கிருஷ்ணமூர்த்தி | 11 x 13.75 | 151.25 | 8918 | 01.04.2019 | 31.03.2022 | 10256 |
| 2 | 8231691 | 3 | சி.கே.மொய்தீன் | 13.5 x10.5 | 141.75 | 2282 | 01.04.2019 | 31.03.2022 | 2624 |
| 3 | 8231692 | 4 | கோபால் | 13.5 x10.5 | 141.75 | 9125 | 01.04.2019 | 31.03.2022 | 10494 |

**இ)பிரதான அலுவலகம் பெரிய கடைவீதி**

| வ. எண் | வரி விதிப்பு எண் | கடை எண் | பெயர் | கடையின் அளவு | மொத்த ச.அடி | பொதுப்பணித்துறை வாடகை மதிப்பீட்டின் படி உயர்வு செய்யப்பட்டு தற்போது செலுத்தி வரும் மாத வாடகை ரூ. | உரிமம் புதிப்பிக்கப்பட வேண்டி நாள். முதல் | முடிய | 01.04.2016 முதல் 15 சதவீதம் உயர்வு செய்யப்பட வேண்டிய மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8200001 | 2 | பாரத ஸ்டேட் வங்கி ATM | 11..5 x 11..5 | 132 | 6900 | 01.04.2019 | 31.03.2022 | 7935 |
| 2 | 8200003 | 3 | இந்தியன் வங்கி | 29 x 21 | 609 | 23000 | 01.04.2019 | 31.03.2022 | 26450 |

**இ)பிரதான அலுவலகம் அம்மா மூலிகை உணவகம்**

| வ. எண் | வரி விதிப்பு எண் | கடை எண் | பெயர் | கடையின் அளவு | மொத்த ச.அடி | பொதுப்பணித்துறை வாடகை மதிப்பீட்டின் படி உயர்வு செய்யப்பட்டு தற்போது செலுத்தி வரும் மாத வாடகை ரூ. | உரிமம் புதிப்பிக்கப்பட வேண்டி நாள். முதல் | முடிய | 01.04.2016 முதல் 15 சதவீதம் உயர்வு செய்யப்பட வேண்டிய மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8200005 | 1 | அம்மா மூலிகை உணவகம் | | 1996 | 11500 | 01.04.2019 | 31.03.2022 | 13225 |

அரசாணை (நிலை எண்.92) நாள்.3.07.2007 பத்தி எண்.IV-ன்படி உரிமம் ஒதுக்கீடு பெற்ற குத்தகைதாரர்கள் ஒவ்வொரு 3 ஆண்டு முடிவுற்ற பின்னர் உரிமம் புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி உரிமம் புதுப்பித்துக் கொள்ள பார்வை 4-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின் மூலம் மேற்குறிப்பிட்ட கடைகளுக்கு நிலுவைத் தொகை மற்றும் புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி சம்மதக் கடிதம் வழங்க தெரிவிக்கப்பட்டதில், மேற்படி கடை உரிமதாரர்களிடமிருந்து நாளது தேதிவரை சம்மதக் கடிதம் எதுவும் பெறப்படவில்லை.

மேற்படி உரிமதாரர்கள் செலுத்தியுள்ள முன் வைப்பு வாடகை தொகையினை உயர்வு செய்யப்படும் வாடகையின் 1 வருட வாடகைத் தொகையினை / வித்தியாச வாடகையினை வசூல் செய்யவும், இத்துடன் புதுப்பித்தல் கட்டணம், வைப்பு தொகை வித்தியாச தொகை, சேவை வரி, மின் கட்டணம் மற்றும் அவ்வப்பொழுது மத்திய மாநில அரசால் நிர்ணயம் செய்யப்படும் இதர வரிகளை செலுத்துவதற்கு ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் உரிமம் புதுப்பித்து ஒப்படைக்கவும், உரிமம் புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி உரிமம் புதுப்பிக்காத நேர்விலும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலத்திற்கு கொண்டு வரவும் அவர்களின் வைப்புத் தொகைகளை பறிமுதல் செய்து உரிமம் ரத்துசெய்து, கறுப்புபட்டியலில் சேர்த்து இவ்வினங்களுக்கு மறு ஏலத்திற்கு கொண்டுவரவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - மூன்றாண்டுகள் முடிவடைந்ததால் அரசாணைபடி 15சதவீதம் வாடகை உயர்வு செய்ய அனுமதிக்கலாம்.

ந.க. எண். 1073 /2019 /அ7 (ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 266 நாள் 29.05.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண் 51-க்குட்பட்ட வி.என். தோட்டம் பின்பகுதியில் சிமெண்ட் காங்கிரீட் தளம் அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் திரும்பக் கட்டுதல் பணிக்கு ரூ.22,00,000- மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் ந.க. எண். 1912 /2020 /எம்.டி. 5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 267 நாள் 29.05.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 15

கோயம்புத்தூர் மாநகராட்சி பொறியியல் பிரிவில் கட்டிட கட்டுமானம், மராமத்து பணிகள் போன்றவற்றிற்கு விலை விபர அட்டவணை தயாரிக்க தமிழ்நாடு பொதுப்பணித்துறை முதன்மைப் பொறியாளர், சென்னை அவர்களின் அனுமதி எண். HDO/Sr-DO-2/SSR 2020-21/20021/2020-1, நாள்.20.04.2020-ல் அனுமதி வழங்கப்பட்ட விலை விபர அட்டவணை பெறப்பட்டுள்ளது. 2020-2021-ம் ஆண்டுக்கான தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணை 20.04.2020 முதல் நடைமுறைப்படுத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று தமிழ்நாடு நெடுஞ்சாலை துறையின் மூலம் சாலைப் பணிகளுக்கும் 2020-2021-ம் ஆண்டுக்கான தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணை நெடுஞ்சாலை துறை உத்திரவு எண்.2744/TCI/DG/2020 நாள்.20.04.2020-ன் படி அனுமதிக்கப்பட்ட தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணை பெறப்பட்டுள்ளது. இவ்விலை விபர அட்டவணை 20.04.2020 முதல் நடைமுறைப்படுத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெறப்பட்ட 2020-21-ம் ஆண்டுக்கான தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணையை இம்மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண் : 2343 /2020/TA

**மாநகர மன்ற தீர்மானம் எண் 268 நாள் 29.05.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 16

**பொருள்** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டது – இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய அரசுக்கு கருத்துரு அனுப்பி வைத்தல் – தொடர்பாக.

**பார்வை**

1. அரசாணை எண்.117, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.19.12.2012.
2. மாமன்ற தீர்மான எண்.418 நாள்.18.03.2013.
3. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழியாக அனுப்பப்பட்ட இவ்வலுவலக இதே எண்ணிட்ட கருத்துரு நாள்.29.04.2013.
4. அரசாணை எண்.62 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை நாள்.11.10.2017
5. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.13920/2018/ஜே 2 நாள்.16.05.2018

6 மாமன்றத் தீர்மானம் எண்.276 நாள்.03.08.2018

7 இதே எண்ணிட்ட இவ்வலுவலக செயல்முறை ஆணை நாள்.13.08.2018 (தினக்கூலி பணியாளர்கள்)

8 மாமன்றத் தீர்மானம் எண்.5 நாள்.30.01.2019

9 இதே எண்ணிட்ட இவ்வலுவலக செயல்முறை ஆணை நாள்.18.02.2019 (தொகுப்பூதிய பணியாளர்கள்)

10 இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடிதம் நாள்.27.11.2019

---------

பார்வை 1ல் காணும் அரசாணையின்படி இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து வந்த 59 தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி பணியாளர்களை இம்மாநகராட்சியுடன் இணைத்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பார்வை 2ல் காணும் மாமன்ற தீர்மானத்தில் மேற்படி பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து பார்வை 3ல் காணும் இவ்வலுவலக செயற்குறிப்பில் மேற்காணும் 59 பணியாளர்களில் பணி ஓய்வு மற்றும் காலமான நபர்களை தவிர மீதமுள்ள 52 நபர்களை பார்வை 1ல் காணும் அரசாணை வெளியிடப்பட்ட நாளான 19.12.2012 முதல் பணியாளர்களின் காலமுறை ஏற்ற ஊதிய விகிதத்தில் பணி நிரந்தரம் செய்து தருமாறு அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது.

பார்வை 4ல் காணும் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அரசாணை மற்றும் பார்வை 5ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தின்படி இம்மாநகராட்சியில் குறைந்த அளவு ஊதியம் பெறுவோர் எவரேனும் இருப்பின் ஊதியம் வழங்கிட நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டதின் பேரில் பார்வை 6 மற்றும் 8ல் காணும் மாமன்ற தீர்மானங்களின்படியும் மற்றும் பார்வை 7 மற்றும் 9ல் காணும் ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணையின்படியும் தினக்கூலி மற்றும் தொகுப்பூதிய பணியாளர்களுக்கு அரசாணை அரசிதழில் வெளியிட்ட நாளான 22.11.2017 முதல் வழங்க ஆணையிடப்பட்டு தற்போது ஊதியம் பெற்று வருகிறார்கள்.

இந்நிலையில் மேற்படி 52 பணியாளர்களில் ஓய்வு பெற்றவர்கள், நீண்ட நாட்களாக பணிக்கு வராதவர்கள் மற்றும் இறந்தவர்கள் தவிர மீதமுள்ள 26 பணியாளர்கள் கீழ்க்கண்டவாறு தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றனர்.

| | | | |
|---|---|---|---|
| 1 | தொகுப்பூதிய குடிநீர் விநியோகப் பணியாளர்கள் | = | 10 நபர்கள் |
| 2 | துப்புரவு பணியாளர்கள் 6 நபர்கள் மற்றும் கழிப்பிடம் துலக்குபவர்கள் 2 நபர்கள் (தொகுப்பூதிய அடிப்படையில்) | = | 8 நபர்கள் |
| 3 | கணினி இயக்குபவர்கள் (தினக்கூலி) | = | 6 நபர்கள் |
| 4 | ஓட்டுநர்கள் (தினக்கூலி) | = | 2 நபர்கள் |

தற்போது பணிபுரிந்து வரும் தொகுப்பூதிய குடிநீர் விநியோக பணியாளர்கள் 10 நபர்களின் பணி விபரம் மற்றும் கல்வித்தகுதிகள் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பணியாளர்களின் பெயர் | பிறந்த தேதி | பணியில் சேர்ந்த நாள் | கல்வித் தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.கே.ராஜேந்திரன் | 10.06.1979 | 12.08.1997 | 6ம் வகுப்பு | |
| 2 | திரு.எஸ்.தர்மராஜ் | 05.01.1974 | 18.04.1996 | M.COM | சென்னை உயர்நீதி மன்ற உத்திரவு எண்.WP 11315/2018 நாள்.28.04.2018ன்படியும் மற்றும் WA எண்.2833/2018 நாள். 13.08.2019ன் படியும் திரு. எஸ். தர்மராஜ் என்பவரது பணிவரன்முறை தொடர்பாக (கோப்பு ந.க.எண்.2034/2020/சி2 (வ)) கருத்துரு இம்மாநகராட்சி யிலிருந்து 08/05/2020 அ;ன்று நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழியாக அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | திரு.கே.தங்கராஜ் | 03.02.1977 | 26.12.2000 | B.A. (History) | |
| 4 | திரு.ஆர்.பழனிசாமி | 12.05.1966 | 26.12.2000 | ITI Plumber | |
| 5 | திரு.பி.முருகன் | 04.02.1978 | 26.12.2000 | 6ம் வகுப்பு | |
| 6 | திரு.கே.ரங்கராஜ் | 30.05.1966 | 05.01.2001 | 3ம் வகுப்பு | |
| 7 | திரு.கே.எம்.துரைசாமி | 25.07.1966 | 05.01.2001 | தமிழில் எழுத படிக்கத் தெரியும் | |
| 8 | திரு.எம்.நஞ்சன் | 27.12.1963 | 05.01.2001 | தமிழில் எழுத படிக்கத் தெரியும் | |
| 9 | திரு.பி.ஆறுமுகம் | 05.12.1968 | 05.01.2001 | தமிழில் எழுத படிக்கத் தெரியும் | |
| 10 | திரு.பரமேஸ்வரன் | 24.10.1981 | 02.01.2001 | 10ம் வகுப்பு தேர்ச்சி பெறவில்லை | |

அரசாணை நிலை எண்.338 நிதித்துறை நாள்.26.08.2010ன்படி பொறியியல் பிரிவில் வரையறை செய்யப்பட்டுள்ள நுழைவுப்பணியிடமான தேர்ச்சி திறனற்ற பணியாளர் பணியிடங்கள் நிரப்ப இயலாது. மேற்படி பணியாளர்களில் இம்மாநகராட்சியில் நிரந்தரமாக பணியமர்த்த பொறியியல் பிரிவில் வேறு நுழைவுப் பணியிடங்கள் காலியாக இல்லை. இப்பணியாளர்களின் நீண்ட கால பணி அனுபவத்தினைக் கருத்திற் கொண்டு, இம்மாநகராட்சியில் காலியாக உள்ள துப்புரவு பணியாளர் பணியிடங்களில் இப்பணியாளர்களை பணியமர்த்தி உத்திரவு பிறப்பிக்க கருத்துரு அனுப்ப மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி 10 பணியாளர்களை பணியமர்த்த மாநகராட்சியில் தேவையான துப்புரவு பணியாளர் காலிப்பணியிடங்கள் உள்ளன. மேலும் இப்பணியாளர்களை பணியமர்த்துவதால் பணியாளர் செலவினம் மாநகராட்சியின் மொத்த வருவாயில் 49%க்கு குறைவாகவே இருக்கும்.

**அலுவலகக்குறிப்பு:** அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்கு பின் மேற்படி தீர்மானத்தை நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு அனுப்பி வைக்கலாம்.

(ந.க.எண்.5734/2011/எம்சி2)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 269 நாள் 29.05.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 17**

**பொருள்** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டது – இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய அரசுக்கு கருத்துரு அனுப்பி வைத்தல் – தொடர்பாக.

**பார்வை**
1. அரசாணை எண்.117, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.19.12.2012.
2. மாமன்ற தீர்மான எண்.418 நாள்.18.03.2013.
3. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழியாக அனுப்பப்பட்ட இவ்வலுவலக இதே எண்ணிட்ட கருத்துரு நாள்.29.04.2013.
4. அரசாணை எண்.62 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை நாள்.11.10.2017
5. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.13920/2018/ஜே 2 நாள்.16.05.2018

6 மாமன்றத் தீர்மானம் எண்.276 நாள்.03.08.2018

7 இதே எண்ணிட்ட இவ்வலுவலக செயல்முறை ஆணை நாள்.13.08.2018 (தினக்கூலி பணியாளர்கள்)

8 மாமன்றத் தீர்மானம் எண்.5 நாள்.30.01.2019

9 இதே எண்ணிட்ட இவ்வலுவலக செயல்முறை ஆணை நாள்.18.02.2019 (தொகுப்பூதிய பணியாளர்கள்)

10 இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடிதம் நாள்.27.11.2019

---------

பார்வை 1ல் காணும் அரசாணையின்படி இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து வந்த 59 தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி பணியாளர்களை இம்மாநகராட்சியுடன் இணைத்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பார்வை 2ல் காணும் மாமன்ற தீர்மானத்தில் மேற்படி பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து பார்வை 3ல் காணும் இவ்வலுவலக செயற்குறிப்பில் மேற்காணும் 59 பணியாளர்களில் பணி ஓய்வு மற்றும் காலமான நபர்களை தவிர மீதமுள்ள 52 நபர்களை பார்வை 1ல் காணும் அரசாணை வெளியிடப்பட்ட நாளான 19.12.2012 முதல் பணியாளர்களின் காலமுறை ஏற்ற ஊதிய விகிதத்தில் பணி நிரந்தரம் செய்து தருமாறு அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது.

பார்வை 4ல் காணும் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அரசாணை மற்றும் பார்வை 5ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தின்படி இம்மாநகராட்சியில் குறைந்த அளவு ஊதியம் பெறுவோர் எவரேனும் இருப்பின் ஊதியம் வழங்கிட நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டதின் பேரில் பார்வை 6 மற்றும் 8ல் காணும் மாமன்ற தீர்மானங்களின்படியும் மற்றும் பார்வை 7 மற்றும் 9ல் காணும் ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணையின்படியும் தினக்கூலி மற்றும் தொகுப்பூதிய பணியாளர்களுக்கு அரசாணை அரசிதழில் வெளியிட்ட நாளான 22.11.2017 முதல் வழங்க ஆணையிடப்பட்டு தற்போது ஊதியம் பெற்று வருகிறார்கள்.

இந்நிலையில் மேற்படி 52 பணியாளர்களில் ஓய்வு பெற்றவர்கள், நீண்ட நாட்களாக பணிக்கு வராதவர்கள் மற்றும் இறந்தவர்கள் தவிர மீதமுள்ள 26 பணியாளர்கள் கீழ்க்கண்டவாறு தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றனர்.

| | | | |
|---|---|---|---|
| 1 | தொகுப்பூதிய குடிநீர் விநியோகப் பணியாளர்கள் | = | 10 நபர்கள் |
| 2 | துப்புரவு பணியாளர்கள் 6 நபர்கள் மற்றும் கழிப்பிடம் துலக்குபவர்கள் 2 நபர்கள் (தொகுப்பூதிய அடிப்படையில்) | = | 8 நபர்கள் |
| 3 | கணினி இயக்குபவர்கள் (தினக்கூலி) | = | 6 நபர்கள் |
| 4 | ஓட்டுநர்கள் (தினக்கூலி) | = | 2 நபர்கள் |

தற்போது பணிபுரிந்து வரும் தொகுப்பூதிய துப்புரவு பணியாளர்கள் 6 நபர்கள் மற்றும் கழிப்பிடம் துலக்குபவர்கள் 2 நபர்களின் பணி விபரம் மற்றும் கல்வித்தகுதிகள் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பணியாளர்களின் பெயர் | பிறந்த தேதி | பணியில் சேர்ந்த நாள் | கல்வித் தகுதி |
|---|---|---|---|---|
| 1 | திரு.பி.எஸ்.சரவண செல்வன் | 05.06.1983 | 20.01.1999 | தமிழில் எழுத படிக்கத் தெரியும். |
| 2 | திரு.பொன்னுசாமி | 12.04.1971 | 16.06.1999 | தமிழில் எழுத படிக்கத் தெரியும். |
| 3 | திரு.எஸ்.சுந்தர்ராஜ் | 15.08.1968 | 16.03.1994 | தமிழில் எழுத படிக்கத் தெரியும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | திரு.எ.செந்தில் | 01.04.1980 | 14.09.2000 | தமிழில் எழுத படிக்கத் தெரியும். |
| 5 | திரு.ஜி.ரவிச்சந்திரன் | 30.12.1967 | 01.03.1991 | தமிழில் எழுத படிக்கத் தெரியும். |
| 6 | திரு.பி.ராஜன் | 09.01.1962 | 07.10.1990 | தமிழில் எழுத படிக்கத் தெரியும். |
| 7 | திருமதி.செண்டு | 01.07.1971 | 01.09.2000 | தமிழில் எழுத படிக்கத் தெரியும். |
| 8 | திருமதி. தனலட்சுமி | 01.07.1978 | 01.04.2003 | தமிழில் எழுத படிக்கத் தெரியும். |

தற்போது தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்கள் 6 நபர்கள் மற்றும் கழிப்பிடம் துலக்குபவர்கள் 2 நபர்கள் ஆக மொத்தம் 8 நபர்களை காலியாக உள்ள துப்புரவு பணியாளர் பணியிடங்களில் பணியமர்த்தி உத்திரவு பிறப்பிக்க கருத்துரு அனுப்ப மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி 8 பணியாளர்களை பணியமர்த்த மாநகராட்சியில் தேவையான துப்புரவு பணியாளர் காலிப்பணியிடங்கள் உள்ளன. மேலும் இப்பணியாளர்களை பணியமர்த்துவதால் பணியாளர் செலவினம் மாநகராட்சியின் மொத்த வருவாயில் 49%க்கு குறைவாகவே இருக்கும்.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்கு பின் மேற்படி தீர்மானத்தை நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு அனுப்பி வைக்கலாம்.

(ந.க.எண்.5734/2011/எம்சி2)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 270 நாள் 29.05.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 18**

**பொருள்** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டது – இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய அரசுக்கு கருத்துரு அனுப்பி வைத்தல் – தொடர்பாக.

**பார்வை**

1. அரசாணை எண்.117, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.19.12.2012.
2. மாமன்ற தீர்மான எண்.418 நாள்.18.03.2013.
3. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழியாக அனுப்பப்பட்ட இவ்வலுவலக இதே எண்ணிட்ட கருத்துரு நாள்.29.04.2013.
4. அரசாணை எண்.62 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை நாள்.11.10.2017
5. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.13920/2018/ஜே 2 நாள்.16.05.2018
6. மாமன்றத் தீர்மானம் எண்.276 நாள்.03.08.2018
7. இதே எண்ணிட்ட இவ்வலுவலக செயல்முறை ஆணை நாள்.13.08.2018 (தினக்கூலி பணியாளர்கள்)
8. மாமன்றத் தீர்மானம் எண்.5 நாள்.30.01.2019
9. இதே எண்ணிட்ட இவ்வலுவலக செயல்முறை ஆணை நாள்.18.02.2019 (தொகுப்பூதிய பணியாளர்கள்)
10. இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடிதம் நாள்.27.11.2019

---------

பார்வை 1ல் காணும் அரசாணையின்படி இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து வந்த 59 தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி பணியாளர்களை இம்மாநகராட்சியுடன் இணைத்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பார்வை 2ல் காணும் மாமன்ற தீர்மானத்தில் மேற்படி பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து பார்வை 3ல் காணும் இவ்வலுவலக செயற்குறிப்பில் மேற்காணும் 59 பணியாளர்களில் பணி ஓய்வு மற்றும் காலமான நபர்களை தவிர மீதமுள்ள 52 நபர்களை பார்வை 1ல் காணும் அரசாணை வெளியிடப்பட்ட நாளான 19.12.2012 முதல் பணியாளர்களின் காலமுறை ஏற்ற ஊதிய விகிதத்தில் பணி நிரந்தரம் செய்து தருமாறு அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது.

பார்வை 4ல் காணும் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அரசாணை மற்றும் பார்வை 5ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தின்படி இம்மாநகராட்சியில் குறைந்த அளவு ஊதியம் பெறுவோர் எவரேனும் இருப்பின் ஊதியம் வழங்கிட நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டதின் பேரில் பார்வை 6 மற்றும் 8ல் காணும் மாமன்ற தீர்மானங்களின்படியும் மற்றும் பார்வை 7 மற்றும் 9ல் காணும் ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணையின்படியும் தினக்கூலி மற்றும் தொகுப்பூதிய பணியாளர்களுக்கு அரசாணை அரசிதழில் வெளியிட்ட நாளான 22.11.2017 முதல் வழங்க ஆணையிடப்பட்டு தற்போது ஊதியம் பெற்று வருகிறார்கள்.

இந்நிலையில் மேற்படி 52 பணியாளர்களில் ஓய்வு பெற்றவர்கள், நீண்ட நாட்களாக பணிக்கு வராதவர்கள் மற்றும் இறந்தவர்கள் தவிர மீதமுள்ள 26 பணியாளர்கள் கீழ்க்கண்டவாறு தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றனர்.

| | | | |
|---|---|---|---|
| 1 | தொகுப்பூதிய குடிநீர் விநியோகப் பணியாளர்கள் | = | 10 நபர்கள் |
| 2 | துப்புரவு பணியாளர்கள் 6 நபர்கள் மற்றும் கழிப்பிடம் துலக்குபவர்கள் 2 நபர்கள் (தொகுப்பூதிய அடிப்படையில்) | = | 8 நபர்கள் |
| 3 | கணினி இயக்குபவர்கள் (தினக்கூலி) | = | 6 நபர்கள் |
| 4 | ஓட்டுநர்கள் (தினக்கூலி) | = | 2 நபர்கள் |

தற்போது பணிபுரிந்து வரும் தொகுப்பூதிய 2 ஓட்டுநர்களின் பணி விபரம் மற்றும் கல்வித்தகுதிகள் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பணியாளர்களின் பெயர் | பிறந்த தேதி | பணியில் சேர்ந்த நாள் | கல்வித் தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.சோமசுந்தரம் | 15.11.1977 | 13.07.2009 | 8ம் வகுப்பு மற்றும் கனரக வாகன உரிமம் | இம்மாநகராட்சியில் காலியாக உள்ள ஓட்டுநர் பணியிடத்தில் இவர்களை பணியமர்த்த மாநகராட்சி பணிவிதிகளில் தெரிவித்துள்ள கல்வித் தகுதி 10ம் வகுப்பு தேர்ச்சி என்பதனை இவர்கள் பொருட்டு, விதி தளர்வு செய்து ஆணை வேண்டுதல் |
| 2 | திரு.சு.சின்ராஜ் | 03.02.1971 | 05.08.2008 | 8ம் வகுப்பு மற்றும் கனரக வாகன உரிமம் | |

தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வரும் 2 ஓட்டுநர்களை இம்மாநகராட்சியில் காலியாக உள்ள ஓட்டுநர் பணியிடத்தில் இப்பணியாளர்களை பணியமர்த்தி உத்திரவு பிறப்பிக்க கருத்துரு அனுப்ப மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி 2 பணியாளர்களை பணியமர்த்த மாநகராட்சியில் தேவையான ஓட்டுநர் காலிப்பணியிடங்கள் உள்ளன. மேலும் இப்பணியாளர்களை பணியமர்த்துவதால் பணியாளர் செலவினம் மாநகராட்சியின் மொத்த வருவாயில் 49%க்கு குறைவாகவே இருக்கும்.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்கு பின் மேற்படி தீர்மானத்தை நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு அனுப்பி வைக்கலாம்.

(ந.க.எண்.5734/2011/எம்சி2)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 271 நாள் 29.05.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 19**

**பொருள்** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டது – இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய அரசுக்கு கருத்துரு அனுப்பி வைத்தல் – தொடர்பாக.

**பார்வை**

**1** அரசாணை எண்.117, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.19.12.2012.

**2** மாமன்ற தீர்மான எண்.418 நாள்.18.03.2013.

**3** நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழியாக அனுப்பப்பட்ட இவ்வலுவலக இதே எண்ணிட்ட கருத்துரு நாள்.29.04.2013.

**4** அரசாணை எண்.62 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை நாள்.11.10.2017

**5** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.13920/2018/ஜே 2 நாள்.16.05.2018

**6** மாமன்றத் தீர்மானம் எண்.276 நாள்.03.08.2018

**7** இதே எண்ணிட்ட இவ்வலுவலக செயல்முறை ஆணை நாள்.13.08.2018 (தினக்கூலி பணியாளர்கள்)

**8** மாமன்றத் தீர்மானம் எண்.5 நாள்.30.01.2019

**9** இதே எண்ணிட்ட இவ்வலுவலக செயல்முறை ஆணை நாள்.18.02.2019 (தொகுப்பூதிய பணியாளர்கள்)

**10** இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடிதம் நாள்.27.11.2019

---

பார்வை 1ல் காணும் அரசாணையின்படி இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து வந்த 59 தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி பணியாளர்களை இம்மாநகராட்சியுடன் இணைத்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பார்வை 2ல் காணும் மாமன்ற தீர்மானத்தில் மேற்படி பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து பார்வை 3ல் காணும் இவ்வலுவலக செயற்குறிப்பில் மேற்காணும் 59 பணியாளர்களில் பணி ஓய்வு மற்றும் காலமான நபர்களை தவிர மீதமுள்ள 52 நபர்களை பார்வை 1ல் காணும் அரசாணை வெளியிடப்பட்ட நாளான 19.12.2012 முதல் பணியாளர்களின் காலமுறை ஏற்ற ஊதிய விகிதத்தில் பணி நிரந்தரம் செய்து தருமாறு அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது.

பார்வை 4ல் காணும் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அரசாணை மற்றும் பார்வை 5ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தின்படி இம்மாநகராட்சியில் குறைந்த அளவு ஊதியம் பெறுவோர் எவரேனும் இருப்பின் ஊதியம் வழங்கிட நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டதின் பேரில் பார்வை 6 மற்றும் 8ல் காணும் மாமன்ற தீர்மானங்களின்படியும் மற்றும் பார்வை 7 மற்றும் 9ல் காணும் ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணையின்படியும் தினக்கூலி மற்றும் தொகுப்பூதிய பணியாளர்களுக்கு அரசாணை அரசிதழில் வெளியிட்ட நாளான 22.11.2017 முதல் வழங்க ஆணையிடப்பட்டு தற்போது ஊதியம் பெற்று வருகிறார்கள்.

இந்நிலையில் மேற்படி 52 பணியாளர்களில் ஓய்வு பெற்றவர்கள், நீண்ட நாட்களாக பணிக்கு வராதவர்கள் மற்றும் இறந்தவர்கள் தவிர மீதமுள்ள 26 பணியாளர்கள் கீழ்க்கண்டவாறு தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றனர்.

| | | | |
|---|---|---|---|
| 1 | தொகுப்பூதிய குடிநீர் விநியோகப் பணியாளர்கள் | = | 10 நபர்கள் |
| 2 | துப்புரவு பணியாளர்கள் 6 நபர்கள் மற்றும் கழிப்பிடம் துலக்குபவர்கள் 2 நபர்கள் (தொகுப்பூதிய அடிப்படையில்) | = | 8 நபர்கள் |
| 3 | கணினி இயக்குபவர்கள் (தினக்கூலி) | = | 6 நபர்கள் |
| 4 | ஓட்டுநர்கள் (தினக்கூலி) | = | 2 நபர்கள் |

தற்போது பணிபுரிந்து வரும் தினக்கூலி அடிப்படையில் கணினி இயக்குபவர்களாக பணிபுரிந்து வரும் 6 நபர்களின் பணி விபரம் மற்றும் கல்வித்தகுதிகள் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பணியாளர்களின் பெயர் | பிறந்த தேதி | பணியில் சேர்ந்த நாள் | கல்வித் தகுதி |
|---|---|---|---|---|
| 1 | திருமதி.கா.தேன்மொழி கணினி இயக்குபவர் | 24.10.1988 | 01.10.2010 | 12ம் வகுப்பு, T/W- Tamil Junior Gr (Feb'2016) English Senior Gr (Feb'2016) & DOA |
| 2 | திருமதி.ர.சீதாலட்சுமி கணினி இயக்குபவர் | 04.05.1979 | 25.11.2005 | 10ம் வகுப்பு, T/W- Tamil Senior Gr (Aug'2016), English Junior Gr (July 1997) & DOA |
| 3 | திருமதி.வெ.மாசிலாமணி கணினி இயக்குபவர் | 06.05.1977 | 01.04.2011 | 12ம் வகுப்பு, T/W- Tamil Junior Gr (Feb'2016), English Senior Gr (Feb'2016) & DOA |
| 4 | திருமதி.சு.ராதாமணி NMR / கணினி இயக்குபவர் | 07.01.1983 | 14.12.2004 | M.Sc Computer Science T/W- Tamil Senior Gr(Feb'2014), English Junior Gr (Aug'2008) & DCA |
| 5 | திருமதி.இ.பர்வீன் பானு NMR / கணினி இயக்குபவர் | 07.05.1982 | 10.12.2004 | 12ம் வகுப்பு (Programming and system Administrative Assistant) |
| 6 | திருமதி.பா.ராதிகா கணினி இயக்குபவர் | 20.04.1973 | 05.08.2008 | 12ம் வகுப்பு,DECE, DCAM |

தினக்கூலி அடிப்படையில் கணினி இயக்குபவர்களாக பணிபுரிந்து வரும் 6 பணியாளர்களை பணிவரன் முறை செய்ய கணினி பணியாளர் அல்லது கணினி விபர பதிவாளர் பணியிடங்கள் மாநகராட்சி பணி விதிகளில் ஏற்படுத்தப்படவில்லை. அதனால் இப்பணியாளர்களை பணிவரன் முறை செய்ய இயலாத நிலை உள்ளது.

எனவே இப்பணியாளர்களை மாநகராட்சியில் காலியாக உள்ள துப்புரவு பணியாளர் பணியிடங்களில் பணியமர்த்தி உத்திரவு பிறப்பிக்க கருத்துரு அனுப்ப மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி 6 பணியாளர்களை பணியமர்த்த மாநகராட்சியில் தேவையான துப்புரவு பணியாளர்கள் காலிப்பணியிடங்கள் உள்ளன.

மேலும் இப்பணியாளர்களை பணியமர்த்துவதால் பணியாளர் செலவினம் மாநகராட்சியின் மொத்த வருவாயில் 49%க்கு குறைவாகவே இருக்கும்.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்கு பின் மேற்படி தீர்மானத்தை நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு அனுப்பி வைக்கலாம்.

(ந.க.எண்.5734/2011/எம்சி2)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 272 நாள் 29.05.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 20**

கோவை மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண் **82** பிரதான அலுவலகம் பிரதான கட்டிடத்தில் கூட்ட அரங்க அறைக்கு (Confrence Hall) முன்புறம் தரை தளம் மற்றும் முதல் தளம் கட்டிடம் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.**70,00,000/-**க்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண். **2348/2020/** எம்.டி.**5**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 273 நாள் 29.05.2020</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 21**

கோவை மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண் **82** பிரதான அலுவலகம் பிரதான கட்டிடத்தில் துணை ஆணையாளர் அறைக்கு முன்புறம் தரை தளம் மற்றும் முதல் தளம் கட்டிடம் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.**70,00,000/-**க்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண். **2349/2020/** எம்.டி.**5**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 274 நாள் 29.05.2020</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 22**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோர நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் (லட்சத்தில்) |
|---|---|---|---|
| **1.** | SZ | போத்தனூரில் அமைந்துள்ள போத்தனூர் – பாலக்காடு இரயில்வே தடத்தின் மேல் புதிதாக இரும்பு பாலம் மற்றும் கழிவுநீர் குழாய்கள் அமைத்தல் பணி<br>ந.க.எண்: **2353 /2020/**எம்டி**4** | **42.80** |
| | | மொத்தம் | **42.80** |

மேற்படி பணி நிர்வாக அனுமதி மற்றும் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 2353/2020/ MD4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 275 நாள் 29.05.2020</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 23

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் மாதந்திர குத்தகை இனங்கள் 2020-2023-க்கான பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 13.03.2020-ல் நடைபெற்றது ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - தொடர்பாக.

**பார்வை :** பொது மின் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற நாள்.13.03.2020.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், 2020-2023 குத்தகை இனங்களுக்கான பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 13.03.2020 -ம் தேதியன்று நடைபெற்றது. இதில் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் வரப்பெற்ற விபரங்கள் கீழ்கண்டவாறு

| வ. எண் | அறிவிப்பாணை வ.எண் | குத்தகை இனங்கள் | அரசு நிர்ணயத் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் | 1-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
| 1 | 2 | மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையம் நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் குளிரூட்டப்பட்ட ஆண்கள், பெண்கள் ஓய்வறை கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 12,74,198/- | திரு. கே. சங்கர்<br>திரு.எம்.செல்வம் | -<br>12,74,200 /- | 12,74,400 /-<br>10,00,800 /- | 12,74,400 /- |
| 2 | 3 | மருதமலை அடிவாரத்தில் உள்ள மாநகராட்சி நவீன கட்டணம் கழிப்பிடம் வசூலிக்கும் உரிமம் | 98,400/- | - | | | |
| 3 | 4 | தடாகம் ரோடு வாழைக்காய் மண்டி சுங்கம் வசூலிக்கும் உரிமம் | 3,59,506/- | திருமதி.எம்.பேபி<br>திரு.எஸ்.மூர்த்தி<br>திரு.எம். மனோகரன் | -<br>3,66,000/-<br>- | 4,11,500/-<br>3,75,000/-<br>2,00,000/- | 4,11,500/- |
| 4 | 5 | காந்திபார்க் பூங்காவில் உள்ள கட்டணம் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 3,59,442/- | - | | | |

வ.எண்.1-ல் மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையம் நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் குளிரூட்டப்பட்ட ஆண்கள், பெண்கள் ஓய்வறை கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு.கே.சங்கர் அரசு நிர்ணயித்த தொகை ரூ.12,74,198/- ஐ விட குத்தகை தொகை அதிகமாக ரூ.12,74,400/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு. கே. சங்கர் என்பவருக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

வ.எண்.3–ல், தடாகம் ரோடு வாழைக்காய் மண்டி சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு திருமதி.எம்.பேபி அரசு நிர்ணயித்த தொகை ரூ.3,59,506/- ஐ விட குத்தகை தொகை அதிகமாக ரூ.4,11,500/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திருமதி.எம்.பேபி என்பவருக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

அ) தற்போது குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 144-ன் கீழ் தடை உத்திரவு பிறபிக்கப்பட்டுள்ளதால் பேருந்துகள் ஏதும் இயக்கப்படவில்லை. ஆதலால் பேருந்து வளாகத்தினுள் சுங்கம் ஏதும் தற்போது வசூலிக்க இயலாது என்பதால் தடை உத்திரவு விலகிக் கொள்ளப்பட்ட பின்பு வ.எண்.(1)-ல் கண்ட இனத்திற்கு ஏலம் கோரிய திரு.சங்கர் என்பவருக்கு ஒப்படை செய்யலாம்.

ஆ) வ.எண்.3-ல் கண்ட தடாகம் ரோட்டில் உள்ள வாழைக்காய் மண்டிக்கு அதிக ஏலம் கோரிய திருமதி.எம்.பேபி என்பவருக்கு ஒப்படை செய்யலாம்.

இ) வ.எண்.2 மற்றும் 4-ல் உள்ள இனங்களுக்கு ஏலம் எவரும் கோரததால் மறு ஏலம் கோரலாம். ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் ஆணை வேண்டி. கோப்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

எனவே, 13.03.2020-ல் நடைபெற்ற ஏலத்தின் அடிப்படையில் மேலலே குறிப்பிடப்பட்டுள்ள 'அ' மற்றும் 'ஆ' ஒப்படை செய்யவும், 'இ' –ல் கண்ட இரண்டு இனங்களுக்கு மறு ஏலம் கோரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 1876/2020 /A1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 276 நாள் 29.05.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 24

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் மாதந்திர மாதந்திர வணிகவளாக இனங்கள் 2020-2024-க்கான பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 13.03.2020-ல் நடைபெற்றது ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - தொடர்பாக.

பார்வை : பொது மின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற நாள். 13.03.2020.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், 2020-2024 மாதந்திர வணிக வளாக இனங்களுக்கான பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 13.03.2020-ம் தேதியன்று நடைபெற்றது. இதில் ஏலம் போன மாதாந்திர வாடகை இனங்கள் மற்றும் ஏலம் போகாத மாதாந்திர வாடகை இனங்களின் விபரங்கள் பின்வருமாறு

### I. ஏலம் போன மாதந்திர வணிகவளாகக் கடைகள் (அட்டவணை 1)

| வ. எண் | அறிவிப்பாணை வ.எண் | வணிக வளாகங்கள் | அரசு நிர்ணயத் தொகை தொகை ரூ | ஏலதாரர் பெயர் | 1-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
| 1 | 4 | திருவேங்கடசாமி ரோடு மாநகராட்சி வணிக வளாக கடைகள் (கடை எண்.10) | 36,570/- | திரு.என்.சரவணகுமார்<br>திரு.எஸ்.ராஜு | -<br>- | 37,000/-<br>36,000/- | 37,000/- |
| 2 | 4 | திருவேங்கடசாமி ரோடு மாநகராட்சி வணிக வளாக கடைகள் (கடை எண்.11) | 36,101/- | திரு.என்.சரவணகுமார்<br>திரு.எம்.சிவகுமார் | -<br>- | 36,500/-<br>35,500/- | 36,500/- |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | ராமசந்திரா ரோடு மாநகராட்சி வணிக வளாக கடைகள் (கடை எண்.7) | 16,950/- | திரு.D.பசுபதி | - | 17,000/- | 17,000/- |

## II. ஏலத்தில் கலந்து கொண்டு அரசு மதிப்பை விட குறைவாக ஏலம் கோரிய இனங்களின் விபரங்கள் (அட்டவணை 2)

| வ. எண் | அறிவிப்பாணை வ.எண் | வணிக வளாகங்கள் | அரசு நிர்ணயத் தொகை தொகை ரூ | ஏலதாரர் பெயர் | 1-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஓப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஓப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
| 1 | 2 | பன்னீர் செல்வம் மேடை கடைகள் (கடை எண்.E 56) | 2,281/- | திரு.லியாகத் அலி | - | 1,500/- | 1,500/- |
| 2 | 3 | ரங்கே கவுண்டர் வீதி நவீன மலர் அங்காடி வணிக வளாக கடைகள் (கடை எண்.7) | 7,015/- | திரு.என். சக்கில்<br>திரு.கே.மணிகண்டன் | -<br>- | 6,500/-<br>6,000/- | 6,500/- |

## III. ஏலம் போகாத மாதந்திரா வணிகவளாகக் கடைகள் (அட்டவணை 3)

| வ. எண். | அறிவிப்பாணை வ.எண் | குத்தகை இனம் |
|---|---|---|
| 1 | 2 | (வார்டு எண்.24) பன்னீர்செல்வம் பூமார்க்கெட் மேடை கடைகள் (தினசரி வாடகை அடிப்படையில்) E56, F67, F68, F70, G85,G86, G87,H93,H94,H98. |
| 2 | 3 | (வார்டு எண்.24) ரங்கே கவுடர் வீதி நவீன மலர் அங்காடி வணிக வளாக கடைகள் **(பிளாக்எண்.I-ல் கடை** எண்கள். 3,4,5,6,7,9,10,11,12,13,14,15,18)<br>**(பிளாக்எண்.II-ல்கடைஎண்கள்.** 19,20,21,22,23,26,27,28,29,30,31,32,37,41,42,45 |
| 3 | 4 | (வார்டு எண்.23) திருவேங்கடசாமி ரோடு தரை தளம் கடை எண்கள்.1,5,8,9 முதல் தளத்தில் உள்ள கடைகள் கடை எண். 16 முதல் 30 வரை (தலா 160 சதுரடி) |
| 4 | 5 | (வார்டு எண்.23) ராமசந்திரா ரோடு மாநகராட்சி வணிக வளாக கடை எண். 1,2,3,4,6. |
| 5 | 6 | (வார்டு எண்.5) கவுண்டம்பாளையம் பிரிவு அலுவலகம் அருகே கட்டப்பட்ட தலா 256 ச.துரடி அளவுள்ள கடை எண். 1 முதல் 3 வரை |
| 6 | 7 | (வார்டு எண்.9) கவுண்டம்பாளையம் பிரபு நகர் மாநகராட்சி வணிகவளாகம் கடை எண். 1,3,4,7,8,9 மற்றும் 10 |
| 7 | 8 | (வார்டு எண்.22) கிருஷ்ண சாமி ரோடு வடக்கு மாநகராட்சி வணிக வளாக கடை எண். 5 |
| 8 | 9 | (வார்டு எண்.22) கிருஷ்ண சாமி ரோடு தெற்கு மாநகராட்சி வணிக வளாக கடை எண். 7 |
| 9 | 10 | (வார்டு எண்.24) ஆரோக்கியசாமி ரோடு தெற்கு பகுதி (சாஸ்திரி மைதானம் அருகில்) மாநகராட்சி வணிக வளாகம் கடை எண். 2,3,4,11,12,20,24,25,26,27,28,29,35,36,37 |
| 10 | 11 | (வார்டு எண்.24) ஆரோக்கியசாமி ரோடு தரைதளம் மாநகராட்சி வணிகவளாக கடை எண். 13 முதல் தளத்தில் ரூம்ஸ். 1,2,3,4,7,15,16 |
| 11 | 12 | (வார்டு எண்.10) மேட்டுப்பாளையம் ரோடு பேருந்து நிலையம் 2-வது தளம் கடை எண்.1,2 மற்றும் 3 (தலா 1000 சதுரடி) |
| 12 | 13 | (வார்டு எண்.15) சிறுவாணி ரோடு (லிங்கனூர் ரோடு) மாநகராட்சி வணிகவளாகம் தரை தள கடைகள் கடை எண். 5 |
| 13 | 14 | (வார்டு எண்.17) மருதமலை அடிவாரம் கடை எண்கள். 3,4,5,6. |
| 14 | 15 | (வார்டு எண்.17) மருதமலை அடிவாரம் கிழக்கு பகுதி கடை எண்கள். 1,2,5 மற்றும் 6 (180 சதுரடி) |
| 15 | 16 | (வார்டு எண்.17) மருதமலை அடிவாரம் மேற்கு பகுதி வடக்கு பார்த்த கடைகள் கடை எண்கள். 3 முதல் 6 மற்றும் 8,9 (தலா 160 சதுரடி) மற்றும் கடை எண். 10 (128 சதுரடி) |

| | | |
|---|---|---|
| 16 | 17 | (வார்டு எண்.05) ஓனாப்பாளையம் ரோடு மாநகராட்சி வணிக வளாக கடைகள்.4,5 |
| 17 | 18 | (வார்டு எண்.05) ஓனாப்பாளையம் ரோடு புதிய கட்டிடம் மாநகராட்சி வணிக வளாக கடைகள். 6,7 |

இனம் 4 –ல், திருவேங்கடசாமி ரோடு மாநகராட்சி வணிக வளாக கடைகள். 10-க்கு திரு.என்.சரவணகுமார் என்பவர் அரசு நிர்ணயித்த தொகை ரூ.36,570/- ஐ விட மாதவாடகை அதிகமாக ரூ. 37,000/- க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு.என்.சரவணகுமார் என்பவருக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

இனம் 4 –ல், திருவேங்கடசாமி ரோடு மாநகராட்சி வணிக வளாக கடைகள். 11-க்கு திரு.என்.சரவணகுமார் என்பவர் அரசு நிர்ணயித்த தொகை ரூ.36,101/- ஐ விட மாதவாடகை அதிகமாக ரூ.36,500/- க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு.என்.சரவணகுமார் என்பவருக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

இனம் 5 –ல், ராமசந்திரா ரோடு மாநகராட்சி வணிக வளாக கடைகள். 7-க்கு திரு.D.பசுபதி என்பவர் அரசு நிர்ணயித்த தொகை ரூ.16,950/- ஐ விட மாதவாடகை அதிகமாக ரூ.17,000/- க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்படி கடை 01.04.2019 காலியாக உள்ளது. மாநகராட்சி விதிகளின்படி, ஏலத்தில் ஒருவர் மட்டும் ஏலம் கோரினால், கடை ஒதுக்கீடு செய்யப்பட கூடாது என உள்ளது. ஆனால், இக்கடை மாநகராட்சியால் ஏலம் விடப்பட்டும் திரு. பசுபதி என்பவரை தவிர ஒருவரும் ஏலம் கோரவில்லை என்பதாலும், தற்போது நடைபெற்ற ஏலத்தில் ஒருவர் மட்டும் அரசு மதிப்பைக் காட்டிலும் அதிகமாக ஏலம் கோாரியுள்ளதால் தொடர்ந்து வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு திரு.D.பசுபதி என்பவருக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

அ) அட்டவணை 1-ல் வ.எண்.1 முதல் 3 வரையுள்ள கடை எண்கள். 10,11 மற்றும் 7 ஆகிய 3 கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி ஏற்று மாதாந்திர வாடகை இனங்களை ஒப்படைப்பு செய்யலாம்.

ஆ) அட்டவணை 2-ல் குறிப்பிட்டுள்ள கடை எண்கள். E56 மற்றும் 7 ஆகிய 2 கடைகளுக்கு அரசு மதிப்பை விட ஒப்பந்தப்புள்ளி குறைவாக கோரப்பட்டுள்ளதால், இவ்வினங்களுக்கு மறு ஏலம் கோரலாம்.

இ) அட்டவணை 3- ல், குறிப்பிட்டுள்ள வ.எண்.1 முதல் 17 வரையுள்ள மாதாந்திர வணிக வளாக கடைகளை எவரும் ஏலம் கோர முன்வராததால் மறு ஏலம் கோரலாம்

எனவே 13.03.2020-ல் நடைபெற்ற ஏலத்தில் அட்டவணை 1-ல் குறிப்பிட்டுள்ள 3 கடைகளுக்கு அரசு மதிப்பைக் காட்டிலும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எனவே, இக்கடைகளை ஒப்பந்ததாரருக்கு ஒப்படைப்பு செய்யவும், அட்டவணை 2 மற்றும் 3-ல் உள்ள இனங்களுக்கு மறு ஏலம் கோரவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

தற்போது கொரான முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 144 தடையுத்தரவு நடைமுறையில் உள்ளதால் அனைத்து கடைகளும் மூடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தடையுத்தரவு விலகிக் கொள்ளப்பட்டபின்பு அட்டவணை I ல் கண்ட கடைகளை உயர்ந்தபட்சத் தொகை கோரிய ஏலதாரர்களுக்கு ஒப்படை செய்யவும், அட்டவணை II மற்றும் III ல் கண்ட இனங்களை மறுஏலத்தில் கொண்டுவரவும் மாமனறத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 1877 /2020 /A1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 277 நாள் 29.05.2020</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 25

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் மாதந்திர குத்தகை இனங்கள் 2020-2023-க்கான பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 18.03.2020-ல் நடைபெற்றது ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - தொடர்பாக.

பார்வை :
1. திரு.அப்துல் ஹக்கிம், மனு நாள் 06.05.2020.
2. ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் உத்தரவு நாள்.15.05.2020.

*****

மேட்டுப்பாளையம் ரோடு எம்.ஜி.ஆர் மொத்த காய்கறி மார்க்கெட் சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமம் 2018-2021- க்கான பொது மின் ஏலம் கோரப்பட்டதில் பொது மின் ஏலத்தில் கலந்து கொண்ட குத்தகைதாரர்களில் உயர்ந்தபட்ச ஏலம் கோரிய திரு.G.கார்த்திக் என்பவர் குத்தகைத் தொகையான ரூ.1,20,00,100/- க்கு குத்தகை இனம் மூன்றாண்டுகளுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது.

மேற்படி, குத்தகைதார் 2019-20 (இரண்டாம் ஆண்டு) -க்கு 5% உயர்வு செய்யபட்ட குத்தகை தொகையான ரூ.1,26,00,105/- ஆகும். குத்தகை வசூலில் நஷ்டம் ஏற்பட்டதால் குத்தகை இனத்தினை தொடர்ந்து நடத்த இயலாது என தெரிவித்ததின் பேரில், ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி அவர்களின் உத்தரவின் படி, குத்தகை இனத்திற்கு 04.12.2019 முதல் துறை ரீதியான வசூல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி அவர்களின் உத்தரவின்படி, 21.01.2020 –ல் நடைபெற்ற குறுகிய கால ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த பட்ச ஏலத்தொகை ரூ.75,00,000/- கோரப்பட்டது. இத்தொகை அரசு மதிப்பைக் காட்டிலும் குறைவாக இருந்ததால், மீண்டும் 27.02.2020 அன்று நடை பெற்ற 2-வது முறை குறுகிய கால ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.79,83,000/- கோரப்பட்டது. மூன்றாவது முறையாக 18.03.2020 –ல் நடை பெற்ற குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி ஏலம் விடப்பட்டது.

இதில் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள இனங்களின் விபரங்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேட்டுப்பாளையம் ரோடு எம்.ஜி.ஆர்.மொத்த காய்கறி மார்க்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமம்

| வ. எண் | குத்தகை இனங்கள் | அரசு நிர்ணயத் தொகை தொகை ரூ | ஏலதாரர் பெயர் | 3-வது முறை | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
| 1. | மேட்டுப்பாளையம் ரோடு எம்.ஜி.ஆர்.மொத்த காய்கறி மார்க்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1,26,00,105/- | 1.திரு.அப்துல் ஹக்கிம்<br>2.திரு.எ. மகாராஜா<br>3.திரு. ஆர். சுப்ரமணி<br>4.திரு.எ.ஜெய்லாபுதீன் | -<br>-<br>-<br>- | 80,25,000/-<br>80,20,000/-<br>80,15,000/-<br>79,00,000/- | - |

தற்போது பார்வை 1-ல் காணும் மனுவில், திரு.அப்துல் ஹக்கிம் என்பவர் 18.03.2020 அன்று நடைபெற்ற கோயம்புத்தூர் மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின் ஏலத்தில் கலந்து கொண்டு ஓர் ஆண்டுக்கான குத்தகைத் தொகை அதிகபட்ச தொகையான ரூ.80,25,000/- ற்கு ஏலம் கோரப்பட்டது என்றும், தொடர்ந்து நடைபெற்ற மூன்று ஏலங்களிலும் தான் அதிகபட்ச தொகை கோரியிருப்பதாலும், தான் கடைசியாக கோரிய ஏலத்தொகை குறைவாக இருப்பதாக மாநகராட்சி நிர்வாகம் கருதியதால், ஏலம் கோரிய தொகையிலிருந்து ரூ.75,000/- ஐ உயர்த்தி ஓராண்டுக்கான குத்தகைத்தொகை ரூ.81,00,000/- ற்கு வழங்குமாறு கோரியுள்ளார்.

மேலும் மாநகராட்சி பணியாளர்களை கொண்டு 04.12.2019 முதல் 12.05.2020 வரை துறை மூலமாக ரூ.21,51,465/- வசூல் செய்யப்பட்டுள்ளது. இதில் ஒரு நாள் ஒன்றுக்கு சராசரியாக சுமார் ரூ.13,363/- வசூல் செய்யப்படுகிறது. இந்நிலையில் நாள் ஒன்றுக்கு ரூ.13,363/- வசூல் ஆகும் பட்சத்தில் 365 (ஒரு வருடம்) நாட்களுக்கு 365 X ரூ.13,363/- ரூ. 48,77,495/- வசூல் ஆகும். தற்போது மேற்படியார் குத்தகை இனத்திற்கு மேலும் ரூ.75,000 குத்தகைத்தொகையில் செலுத்துவதாக கோரி, குத்தகைத்தொகை ரூ.81,00,000/- க்கு குத்தகை இனத்தினை தனக்கே வழங்குமாறு கடிதம் வழங்கியுள்ளார். எனவே, துறை ரீதியான வசூல் செய்ததைவிட கூடுதலாக இருப்பதாலும், துறை வசூலில் 24 மணி நேரத்திற்கு 3 ஷிப்ட் முறையில் ஒவ்வொரு ஷிப்டிற்கும்

தலா 4 பேர் வீதம் வசூல் பணியில் ஈடுபட வேண்டியுள்ளது. மேற்படி பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் ஒரு நாளைக்கு 900 X 11= 9,900/- வீதம் 30 நாட்களுக்கு 9900 X 30= 2,97,000/- வீதம் 4 மாதங்களாக ரூ.11,88,000/- ஊதியமாக வழங்கப்பபட்டுள்ளது. மேலும், மேற்கு மண்டலத்தில் ஏற்கனவே பணியாளர்கள் பற்றாக்குறை உள்ள நிலையில் 11 பணியாளர்கள் வசூல் பணிக்கு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

மூன்று முறை மறு ஏலம் விடப்பட்டும் அரசு மதிப்பு ரூ.1,26,00,105/- க்கு மேல் எவரும் ஏலம் கோரவில்லை. மேற்கு மண்டலத்தில் ஏற்கனவே பணியாளர்கள் பற்றாக்குறை உள்ள நிலையில் அலுவலர்களை பணியமர்த்தி வசூல் செய்தும் துறை ரீதியான வசூலும் மிகவும் குறைவாகவே உள்ள சூழ்நிலையிலும், மாநகராட்சிக்கு தொடர் வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டும் திரு.அப்துல் ஹக்கிம் என்பவரின் ஆண்டு குத்தகைத் தொகை ரூ.81,00,000/- ற்கு ஒப்படைப்பு செய்ய கோரும் கோரிக்கையின் பேரில் 2020-2023 வரை மூன்று ஆண்டுகளுக்கு ஏலத்தினை உறுதி செய்வது குறித்து ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி அவர்களின் உத்தரவின்படி ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கு மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 136 /2018/அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 278 நாள் 29.05.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 26

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சியின் இணைக்கப்பட்ட பகுதிகளில் பவானி நதியை நீர் ஆதாரமாக கொண்டு குடிநீர் விநியோக வளர்ச்சி திட்டம் – பில்லூர் III - AMRUT திட்டத்தின் கீழ் மதிப்பீட்டுத் தொகை ரூ. **779.86** கோடியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல் படுத்த அரசு ஆணை எண்.G.O(Ms)No.**36** MAWS(MC2(2)) Department நாள்.**10.03.2020** மூலம் HUDCO நிறுவனத்திடமிருந்து ரூ.**405.71** கோடிக்கு கடனுதவி பெற்று திட்டம் செயல்படுத்தவும் திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நிதி ஆதாரம்: (ரூ.கோடியில்)

| விபரம் | மதிப்பீடு |
|---|---|
| அம்ரூத் திட்டத்தின்கீழ் மத்திய அரசின் பங்குத்தொகை | **214.27** |
| அம்ரூத் திட்டத்தின்கீழ் மாநில அரசின் பங்குத்தொகை | **129.86** |
| மாநகராட்சின் பங்கு தொகை | **74.02** |
| HUDCO கடனுதவி (அரசு உத்தரவாதத்துடன்) (ரூ.**322.00**கோடி+ரூ.**39.71**கோடி) | **361.71** |
| மொத்த மதிப்பு | **779.86** |

மேற்படி திட்டத்திற்கு HUDCO நிறுவனத்திடமிருந்து ரூ.**405.71** கோடி மாநில அரசின் உத்தரவாதத்துடன் மாநகராட்சி நேரடியாக கடனுதவி பெறவும் மற்றும் கடனுதவி பெறுவதற்கான அனைத்து ஒப்பந்த ஆவணங்களிலும் ஆணையாளர் கையொப்பம் இடுவதற்கு மாமன்ற தீர்மான எண் **75** நாள்.**20.01.2020**-ன் படி மாமன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, **27.01.2020** அன்று HUDCO, சென்னை நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

இதனைதொடர்ந்து HUDCO, சென்னை நிறுவனத்திடமிருந்து கடனுதவி பெறுவதற்கான முன்மொழிவு (திட்டம் எண்.**21378**) அனுமதி கடிதம் நாள்.**06.03.2020** மூலம் பெறப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத்தின் அனுமதி கடிதத்தில் (எண்.**6(1)**) குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு கடன் உதவி விபரம் கீழ்க்கண்டவாறு:

திட்ட நிதி விபரங்கள்: (ரூ.கோடியில்)

| | | |
|---|---|---|
| 1. | திருத்திய திட்ட மதிப்பீடு | 779.86 |
| | நிலம் கையகப்படுத்துவதற்கான மதிப்பீட்டுத் தொகை | 104.00 |
| | மொத்த திட்ட மதிப்பீடு | 883.86 |

| | | |
|---|---|---|
| 2. | HUDCO நிறுவன விண்ணப்ப கட்டணம், Front-end-fees மற்றும் GST, வட்டி உட்பட (2 வருட கட்டுமான பணி கால வட்டி விகிதம்) | 38.36 |
| | மொத்த திருத்திய திட்ட மதிப்பீடு | 922.22 |

HUDCO நிறுவன கடன் அனுமதிக்கான கடிதத்தில் குறிப்பிட்டுள்ள எண்.6 (1)ன் படி திருத்திய திட்ட மதிப்பீடான ரூ.922.22 கோடியில், திட்ட மதிப்பீடான ரூ.883.86 கோடி **(Project Cost + Land Cost) தவிர** மீதமுள்ள கூடுதல் செலவீனங்கலான (அ). 2 வருட கட்டுமான பணி கால வட்டி விகிதம் (ஆ). Front-end-fees (இ).GST (ஈ). **Processing Fee** மற்றும் திட்ட மதிப்பீட்டில் ஏற்படும் கூடுதல் செலவினங்களை மாநகராட்சியே ஏற்கும். எனவே HUDCO நிறுவன கடன் அனுமதி கடிதத்தில் குறிப்பிட்டுள்ள கடனுக்கான வட்டி விகிதம் மற்றும் நிபந்தனைகளை ஏற்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண் 1987/2010/ ப.வ.(பி)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 279 நாள் 29.05.2020</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 27

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சிக்கு சொந்தமான வெள்ளலூர் பகுதியில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் கட்டுதல் பணி மேற்கொள்ள அரசு ஆணை எண். G.O (Ms) No.123/MAWS (MC-II) dept நாள்: 03/10/2019–மூலம் ரூ.168.00 கோடி (50%அரசு மானியம் ரூ. 84.00 கோடி மற்றும் மீதமுள்ள 50 % தொகை மாநகராட்சி நிதி ரூ.84.00 கோடி) மதிப்பீட்டில் மாநகராட்சிக்கு சொந்தமான வெள்ளலூர் பகுதியில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

<u>நிதி ஆதாரம்:-</u>

ரூ.கோடியில்

| | |
|---|---|
| அரசு மானியம் 50% | ரூ.84.00 |
| மாநகராட்சி நிதி 50% (HUDCO கடனுதவி) | ரூ.84.00 |
| மொத்தம் | ரூ.168.00 |

இப்பணிக்கான மாநகராட்சியின் 50% மதிப்பீட்டுத்தொகையான ரூ.84.00 கோடிக்கு HUDCO நிறுவனத்திடமிருந்து கடனுதவி பெறவும் மற்றும் கடனுதவி பெறுவதற்கான அனைத்து ஒப்பந்த ஆவணங்களிலும் ஆணையாளர் கையொப்பம் இடுவதற்கு மாமன்ற தீர்மான எண் 71 நாள்.20.01.2020-ன் படி மாமன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, 27.01.2020 அன்று HUDCO, சென்னை நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

இதனைதொடர்ந்து HUDCO, சென்னை நிறுவனத்திடமிருந்து வெள்ளலூர் பகுதியில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் கட்டுதல் பணிக்கு கடனுதவி பெறுவதற்கான முன்மொழிவு (திட்டம் எண். 21374) அனுமதி கடிதம் நாள். 27.02.2020 மூலம் பெறப்பட்டுள்ளது. HUDCO நிறுவனத்திடமிருந்து கடனுதவி பெறுவதற்கான அனுமதி கடிதத்தில் குறிப்பிட்டுள்ள கூடுதல் நிபந்தனை எண் 6 (1 ) - ன் படி ஏற்படும் திருத்திய மதிப்பீடான ரூ.177.89 கோடிக்கான விபரம் கீழ்கண்டவாறு,

| | | |
|---|---|---|
| 1. | திட்ட மிதிப்பீட்டுத்தொகை | ரூ.168.00 கோடி |
| 2. | HUDCO நிறுவன செயலாக்க கட்டணம் , கட்டுமான பணி காலமான 2 வருடத்திற்கான வட்டி கட்டணம், விண்ணப்ப கட்டணம், Front-end-fees மற்றும் GST உட்பட | ரூ.9.89 கோடி |
| | மொத்தம் | ரூ.177.89 கோடி |

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள திட்ட மதிப்பீடான ரூ.**168.00** கோடி தவிர மீதமுள்ள கூடுதல் செலவினங்களை இம்மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், HUDCO நிறுவன கடனுக்கான வட்டி விகிதம் மற்றும் நிபந்தனைகளையும் ஏற்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 2180/2015/எம்டி4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 280 நாள் 29.05.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 28**

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 02க்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ந.க.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|---|
| 1. | 2237/20/எம்டி2 | வார்டு 02-ல் உள்ள வி.சி.எஸ். நகர் முதல் வீதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் பணிக்கு | 19.70/- |

மேற்கண்ட பட்டியலில் உள்ள பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தாள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண.2237 /2020/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 281 நாள் 29.05.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 29**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சிக்கு சொந்தமான வெள்ளலூர் பகுதியில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைப்பதற்கு ரூ.**168.00** கோடியில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்ததாரர் இறுதி செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. (திட்டமிடுதல் முதல் வேலை முடிவு வரை) **(Project Management Consultants (PMC)) மூலம்** வெள்ளலூர் பகுதியில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் முன்மொழிவுக்கான கோரிக்கை (Request for proposal) **24.02.2020** அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து மேற்கண்ட பணியின் முக்கியத்துவம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோர ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி **28.02.2020**-ல் பெறப்பட்டது. அதனை தொடர்ந்து **07.05.2020** தேதியன்று தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி இணைய தளத்தின் மூலம் இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது அதன் விபரம் பின்வருமாறு .

1). தி/ள். எஸ்.ஜி.எஸ். இந்தியா பி லிட், சென்னை
2). தி/ள்.ஸ்ரீ வள்ளி எண்டர்பிரைசஸ், தஞ்சநல்லூர்

மேற்கண்ட நிறுவனங்கள் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியும், விலைப்புள்ளியும் திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்ய ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு கூட்டம் **27.05.2020** அன்று நடைபெற்றது. கூட்டத்தில் மாநகரப்பொறியாளர், உதவி ஆணையர் (கணக்குகள்), நிர்வாகப்பொறியாளர் (தெற்கு & கிழக்கு) மற்றும் உதவி நிர்வாகப்பொறியாளர் (தெற்கு) ஆகியோர் கலந்து கொண்ட வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் பற்றி விவாதித்து கீழ்கண்டவாறு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஆவணங்களை தொழில்நுட்ப மதிப்பீடு செய்யப்பட்டதில், தி/ள்.ஸ்ரீ வள்ளி எண்டர்பிரைசஸ், தஞ்சநல்லூர் நிறுவனம் தொழில்நுட்ப தகுதியில் தேர்ச்சி பெறவில்லை. தி/ள். எஸ்.ஜி.எஸ். இந்தியா பி லிட், சென்னை நிறுவனம் தொழில்நுட்ப தகுதியில் தேர்ச்சி பெற்றுள்ளதை தொடர்ந்து 18.05.2020 அன்று கடிதத்தின் மூலம் ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு தெரிவிக்கப்பட்டது.

தி/ள். எஸ்.ஜி.எஸ். இந்தியா பி லிட், சென்னை நிறுவனம் 22.05.2020 அன்று விலைப்புள்ளி திறப்பில் 2.03% திட்ட மதிப்பீடு கோரப்பட்டிருந்தது. இதனை தொடர்ந்து, மாநகராட்சி விலைப்புள்ளி குறைப்பு கேட்டு 26.05.2020 தேதியன்று மேற்படி நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி நிறுவனத்தார் 2.03% இருந்து 2.00% ஆக விலைப்புள்ளி குறைக்க 27.05.2020 தேதிய கடிதத்தில் ஒப்புதல் தெரிவிக்கப்பட்டது.

எனவே, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழுவின் ஒப்புதலின்படி தி/ள். எஸ்.ஜி.எஸ். இந்தியா பி லிட், சென்னை நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

ந.க.எண். 2180/2015/எம்டி.4 அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம்

**மாநகர மன்ற தீர்மானம் எண் 282 நாள் 29.05.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 30**

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மைப் பணிக்காக 67 மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் கீழ் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டுகளில் கட்டப்பட்டுள்ள **10 மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர்களின் இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகளை** மூன்றாண்டுகளுக்கு (3 Years) தனியார் மூலம் மேற்கொள்வதற்கு ஆணையர் மற்றும் தனி அதிகாரி அவர்களது நிர்வாக அனுமதி 06.02.2020 அன்று பெற்றதனைத் தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. அதில் கீழ்க்கண்ட நிறுவனங்கள் கலந்து கொண்டு அவர்களது ஒப்பந்தப்புள்ளிகளை வழங்கினர். அதன் விபரம் பின்வருமாறு.

| வரிசை எண் | வேலையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்ததாரர் கோரிய தொகை | ஒப்பந்தப்புள்ளி ஏற்கும் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 8 கவுண்டம்பாளையம் பழைய குப்பைக் கிடங்கு வளாகத்தில், தெற்கு பகுதியில் அமைந்துள்ள மைக்ரோ கம்போஸ்டிங் சென்டருக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி (ந.க.எண். 42 / 2018 / ஜே. என்.5) | இல்லை | 1. தி/ள் எஸ் எம் எஸ் என்விரோ இன்ஜினியர்ஸ் அண்ட் இன்ப்ராஸ்ட்ரக்ஷர், கோயம்புத்தூர். | ரூ. 3475 / டன் | ஏற்கப்படவில்லை |
| | | | 2. தி/ள். க்ளீன் சிட்டிஸ் பவுண்டேஷன், கோயம்புத்தூர். | ரூ. 3470 / டன் | **ஏற்கப்பட்டது. ரூ. 3400 / டன் விலை குறைப்பிற்கு பின்** |
| 2 | வார்டு எண். 9 கவுண்டம்பாளையம் பழைய குப்பைக் கிடங்கு வளாகத்தில், வடக்கு பகுதியில் அமைந்துள்ள மைக்ரோ கம்போஸ்டிங் சென்டருக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி (ந.க.எண். 6997 / 2018 / ஜே. என்.5) | இல்லை | 1. தி/ள் எஸ் எம் எஸ் என்விரோ இன்ஜினியர்ஸ் அண்ட் இன்ப்ராஸ்ட்ரக்ஷர், கோயம்புத்தூர். | ரூ. 3475 / டன் | ஏற்கப்படவில்லை |
| | | | 2. தி/ள். க்ளீன் சிட்டிஸ் பவுண்டேஷன், கோயம்புத்தூர். | ரூ. 3470 / டன | **ஏற்கப்பட்டது. ரூ. 3400 / டன் விலை குறைப்பிற்கு பின்** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | வார்டு எண். 23 ஆர்.எஸ்.புரம் சர் சண்முகம் சாலை யில் அமைந்துள்ள மைக்ரோ கம்போஸ்டிங் சென்டருக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி (ந.க.எண். 34 / 2018 / ஜே. என்.5) | இல்லை | 1. தி/ள். க்ளீன் சிட்டிஸ் பவுண்டேஷன், கோயம்புத்தூர். | ரூ. 3455 / டன் | ஏற்கப்படவில்லை |
| | | | 2. தி/ள் எஸ் எம் எஸ் என்விரோ இன்ஜினியர்ஸ் அண்ட் இன்ப்ராஸ்ட்ரக்ஷர், கோயம்புத்தூர். | ரூ. 3450 / டன் | **ஏற்கப்பட்டது.** **ரூ. 3400 / டன் விலை குறைப்பிற்கு பின்** |
| 4 | வார்டு எண். 17 ஒனாப்பாளையம் burial ground வளாகத்தில் அமைந்துள்ள மைக்ரோ கம்போஸ்டிங் சென்டருக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி (ந.க.எண். 9286 / 2018 / ஜே. என்.5) | இல்லை | 1. தி/ள் எஸ் எம் எஸ் என்விரோ இன்ஜினியர்ஸ் அண்ட் இன்ப்ராஸ்ட்ரக்ஷர், கோயம்புத்தூர். | ரூ. 3475 / டன் | ஏற்கப்படவில்லை |
| | | | 2. தி/ள். க்ளீன் சிட்டிஸ் பவுண்டேஷன், கோயம்புத்தூர். | ரூ. 3465 / டன் | **ஏற்கப்பட்டது.** **ரூ. 3400 / டன் விலை குறைப்பிற்கு பின்** |
| 5 | வார்டு எண். 11 கே.ஏ.இராமசாமி வீதியில் அமைந்துள்ள மைக்ரோ கம்போஸ்டிங் சென்டருக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி (ந.க.எண். 11816 / 2018 / MD2) | இல்லை | 1. தி/ள், ஸ்ரீ பொம்மு இண்டஸ்ட்ரீஸ், கோயம்புத்தூர். | ரூ. 3460 / டன் | ஏற்கப்படவில்லை |
| | | | 2. தி/ள். க்ளீன் சிட்டிஸ் பவுண்டேஷன், கோயம்புத்தூர். | ரூ. 3450 / டன் | **ஏற்கப்பட்டது.** **ரூ. 3400 / டன் விலை குறைப்பிற்கு பின்** |
| 6 | வார்டு எண். 10 எம்ஜிஆர் சந்தை வளாகத்தில் அமைந்துள்ள மைக்ரோ கம்போஸ்டிங் சென்டருக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி (ந.க.எண். 7774 / 2018 / MD2) | இல்லை | 1. தி/ள். ஸ்ரீ பொம்மு இண்டஸ்ட்ரீஸ், கோயம்புத்தூர். | ரூ. 3460 / டன் | ஏற்கப்படவில்லை |
| | | | 2. தி/ள். க்ளீன் சிட்டிஸ் பவுண்டேஷன், கோயம்புத்தூர். | ரூ. 3450 / டன் | **ஏற்கப்பட்டது.** **ரூ. 3400 / டன் விலை குறைப்பிற்கு பின்** |
| 7 | வார்டு எண். 22 பாரதி பார்க் சாலை 2-ல் உள்ள மாநகராட்சி பணிமனை வளாகத்தில் அமைந்துள்ள மைக்ரோ கம்போஸ்டிங் சென்டருக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி (ந.க.எண். 7786/ 2018 / MD2) | இல்லை | 1. தி/ள். க்ளீன் சிட்டிஸ் பவுண்டேஷன், கோயம்புத்தூர். | ரூ. 3490 / டன் | ஏற்கப்படவில்லை |
| | | | 2. தி/ள். ஸ்ரீ பொம்மு இண்டஸ்ட்ரீஸ், கோயம்புத்தூர். | ரூ. 3470 / டன் | **ஏற்கப்பட்டது.** **ரூ. 3400 / டன் விலை குறைப்பிற்கு பின்** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | வார்டு எண். 22 பாரதி பார்க் பிரதான சாலை மற்றும் மேட்டுப்பாளையம் சாலை சந்திப்பில் அமைந்துள்ள மைக்ரோ கம்போஸ்டிங் சென்டருக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி (ந.க.எண். 11817 / 2018 / MD2) | இல்லை | 1. தி/ள். க்ளீன் சிட்டிஸ் பவுண்டேஷன், கோயம்புத்தூர். | ரூ. 3480 / டன் | ஏற்கப்படவில்லை |
| | | | 2. தி/ள். ஸ்ரீ பொம்மு இண்டஸ்ட்ரீஸ், கோயம்புத்தூர். | ரூ. 3470 / டன் | **ஏற்கப்பட்டது.** **ரூ. 3400 / டன் விலை குறைப்பிற்கு பின்** |
| 9 | வார்டு எண். 24 ஆர்.எஸ்.புரம் வாழைக்காய் மண்டி வளாகத்தில் அமைந்துள்ள மைக்ரோ கம்போஸ்டிங் சென்டருக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி (ந.க.எண். 35 / 2018 / MD2) | இல்லை | 1. தி/ள். க்ளீன் சிட்டிஸ் பவுண்டேஷன், கோயம்புத்தூர். | ரூ. 3470 / டன் | ஏற்கப்படவில்லை |
| | | | 2. தி/ள் எஸ் எம் எஸ் என்விரோ இன்ஜினியர்ஸ் அண்ட் இன்ப்ராஸ்ட்ரக்ஷர், கோயம்புத்தூர். | ரூ. 3450 / டன் | **ஏற்கப்பட்டது.** **ரூ. 3400 / டன் விலை குறைப்பிற்கு பின்** |
| 10 | வார்டு எண். 24 ஆர்.எஸ்.புரம் இசைக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள மைக்ரோ கம்போஸ்டிங் சென்டருக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி (ந.க.எண். 11818 / 2018 / MD2 / JN 5) | இல்லை | 1. தி/ள். க்ளீன் சிட்டிஸ் பவுண்டேஷன், கோயம்புத்தூர். | ரூ. 3470 / டன் | ஏற்கப்படவில்லை |
| | | | 2. தி/ள் எஸ் எம் எஸ் என்விரோ இன்ஜினியர்ஸ் அண்ட் இன்ப்ராஸ்ட்ரக்ஷர், கோயம்புத்தூர். | ரூ. 3450 / டன் | **ஏற்கப்பட்டது.** **ரூ. 3400 / டன் விலை குறைப்பிற்கு பின்** |

அ) மேற்கூறிய மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர்களை மூன்றாண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை தனியார் மூலம் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி பெறுவதற்கும், ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கும், அதற்குண்டாகும் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், அவசர அவசியம் கருதி கடந்த 06.02.2020 ல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டது.

ஆ) மேலும், திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அத்தியாவசியத்தினை கருத்தில் கொண்டு விலைகுறைப்பிற்குப் பின்னர் மேலே கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளிகளை வழங்கிய ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க 29.04.2020 ல் ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டது.

அவ்வாறு ஆணையர் மற்றும் தனி அலுவலரிடம் பெறப்பட்ட முன் அனுமதிகளுக்கு பின்னேற்பு பெற, வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம் ந.க.எண். 6997 / 2018 / ஜே என் 5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 283 நாள் 29.05.2020</u>**

அனுமதிக்கப்பட்டது.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

## பொருள் எண் 31

| | |
|---|---|
| பொருள்- | வடக்கு மண்டலம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – வார்டு எண் 31-க்குட்பட்ட விளாங்குறிச்சி சாலையில் கோவை வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து புதியதாக கட்டப்பட்டுள்ள சமுதாயக்கூடம் - தினசரி வாடகை நிர்ணயம் செய்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு விடுவது – தொடர்பாக |
| பார்வை- | உதவி நிர்வாக பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள் 20.02.2020 |

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 31-க்கு உட்பட்ட விளாங்குறிச்சி சாலையில் கோவை வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து புதியதாக ரூ.15 இலட்சமும், மாநகராட்சி பொது நிதியில் ரூ.35+28.30=63.30 இலட்சம் மதிப்பீட்டில் ஆர்.சி.சி. கட்டிடம் தரைத்தளம் 219.14 சதுர மீட்டர்(அ) 2358 சதுர அடியில் சமுதாயக்கூடம் கட்டப்பட்டுள்ளது. சமுதாய கூடத்திற்கு தினசரி வாடகை ரூ.1500/- மற்றும் மின் கட்டணம், துப்புரவு செய்வதற்கு ரூ.500/- மொத்தம் ரூ.2000/- வீதமும் மற்றும் வைப்புத்தொகை ரூ.1500/- என்ற அடிப்படையில் தினசரி வாடகை தொகை நிர்ணயம் செய்து சமுதாயக் கூடத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - மாமன்றம் முடிவு செய்யலாம். நக.எண். 8364/ 2017 / அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 284 நாள் 29.05.2020**

சமுதாயக்கூடத்திற்கு (மின் கட்டணம் மற்றும் துப்புரவு செய்வது உள்பட) தினசரி வாடகை ரூ.2000/- எனவும், வைப்புத்தொகை ரூ.1500/- எனவும் நிர்ணயித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 32

| | |
|---|---|
| பொருள்- | வடக்கு மண்டலம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – வார்டு எண் 41-க்குட்பட்ட மணியகாரன்பாளையம் கக்கன்ஜி வீதியில் கோவை வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து புதியதாக கட்டப்பட்டுள்ள சமுதாயக்கூடம் - தினசரி வாடகை நிர்ணயம் செய்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு விடுவது – தொடர்பாக |
| பார்வை- | உதவி நிர்வாக பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள் 03.09.2019 |

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 41-க்கு உட்பட்ட மணியகாரன்பாளையம் கக்கன்ஜி வீதியில் கோவை வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து புதியதாக 1274 ச.அடி அளவில் ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் கட்டப்பட்டுள்ளது. சமுதாய கூடத்திற்கு தினசரி வாடகை ரூ.1500/- மற்றும் மின் கட்டணம், துப்புரவு செய்வதற்கு ரூ.500/- மொத்தம் ரூ.2000/- வீதமும் மற்றும் வைப்புத்தொகை ரூ.1500/- என்ற அடிப்படையிலும் தினசரி வாடகை தொகை நிர்ணயம் செய்து சமுதாயக் கூடத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - மாமன்றம் முடிவு செய்யலாம். நக.எண். 8364/ 2017 / அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 285 நாள் 29.05.2020**

சமுதாயக்கூடத்திற்கு (மின் கட்டணம் மற்றும் துப்புரவு செய்வது உள்பட) தினசரி வாடகை ரூ.2000/- எனவும், வைப்புத்தொகை ரூ.1500/- எனவும் நிர்ணயித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 33**

**பொருள்** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – தமிழ்நாடு மாநகராட்சிகள் பொதுப்பணி விதிகள் 1996 – வகுப்பு II, வகை I ல் உள்ள மாமன்ற செயலாளர் பணியிடம் – திரு.ஆ. அமல்ராஜ், மாமன்ற செயலாளர் பொருட்டு தரம் உயர்த்துதல் – தொடர்பாக

**பார்வை**

1. அரசாணை எண்.237 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.26.09.1996
2. திரு.ஆ. அமல்ராஜ், மாமன்றச் செயலாளர் மற்றும் சட்ட அலுவலர் (முழு கூடுதல் பொறுப்பு) அவர்களின் விண்ணப்பம் நாள்.07.02.2020
3. ஆணையாளர் அவர்களின் ஆணை நாள்.27.05.2020

---

கோயம்புத்தூர் மாநகராட்சியில் மாமன்றச் செயலாளர் மற்றும் சட்ட அலுவலர் (முழு கூடுதல் பொறுப்பு) ஆக பணியாற்றி வரும் திரு.ஆ. அமல்ராஜ் அவர்கள், தான் கடந்த 09.11.1989 அன்று கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணியில் சேர்ந்து சட்டப்படிப்பில் பட்டம் பெற்றிருந்ததால் அரசாணை (ப) எண்.412 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந–4) துறை நாள்.24.10.2011ன்படி மாமன்ற செயலாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டு பணிபுரிந்து வருவதாகவும், சட்ட அலுவலர் பணியிடத்தை கூடுதல் பொறுப்பாக 17.02.2012 முதல் 25.06.2013 வரையிலும், மற்றும் 16.08.2019 முதல் நாளது வரையிலும் முழு கூடுதல் பொறுப்பாக கவனித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் தமிழ்நாடு மாநகராட்சிகள் பொதுப்பணிவிதிகள் 1996ன் பகுதி III பொது விதிகள் (General rules) கீழமைந்துள்ள விதி 29ன்படி மாமன்றச் செயலாளராகிய தன்னை நிர்வாக அலுவலர் அல்லது கணக்கு அலுவலராக பணிமாற்றம் செய்யக்கோரி பலமுறை விண்ணப்பித்தும் பணிமாறுதல் அளிக்கப்படாததால் உதவி ஆணையாளராக பதவி உயர்வு பெறும் வாய்ப்பு தனக்கு கிடைக்காமல் 27.10.2011 முதல் பதவி உயர்வு எதுவுமின்றி மாமன்றச் செயலாளராக பணிபுரிந்து வருவதாகவும், மாமன்ற செயலாளர் பணியிடம் வகுப்பு II ல் உள்ளபோதும், தான் வகுப்பு II பதவியில் மாமன்ற செயலாளராக பணியில் சேர்ந்த 27.10.2011க்குப் பின்னர் கணக்கு அலுவலராக பதவி உயர்வு பெற்ற திரு.கே. ரவிக்குமார் என்பவர் இரண்டு ஆண்டுகள் கணக்கு அலுவலராக பணிமுடித்ததின் அடிப்படையில் அரசாணை (ப) எண் 682 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.ந.3) துறை நாள் 23.11.2015ன்படி உதவி ஆணையர் (வருவாய்) பதவி உயர்வு பெற்றுள்ளார். மேலும் திரு.வீ. சரவணன், திருமதி.ஆர். மோகனசுந்தரி மற்றும் திரு.என். அண்ணாதுரை ஆகியோர் வகுப்பு II நிர்வாக அலுவலர்/ கணக்கு அலுவலர் பதவியில் இரண்டு ஆண்டுகள் பணி முடித்திருந்ததின் அடிப்படையில் அரசாணை (ப) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.27.02.2019ன்படி உதவி ஆணையாளர்களாகப் பதவி உயர்வு வழங்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

பார்வை 1ல் காணும் தமிழ்நாடு மாநகராட்சிகள் பொதுப்பணி விதிகள் 1996 அமல்படுத்தப்பட்ட பின்பு கோயம்புத்தூர் மாநகராட்சி 105 சதுர கிலோ மீட்டர் பரப்பில் நான்கு மண்டலங்கள் செயல்பட்டு வந்தநிலையில் கடந்த 2011 ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட எல்லை விரிவாக்கத்தின்போது இரண்டு நகராட்சிகள், எட்டு பேரூராட்சிகள் மற்றும் ஒரு கிராம ஊராட்சி என பதினொறு உள்ளாட்சிகளை உள்ளடக்கி 257 சதுரகிலோமீட்டர் பரப்பளவுள்ள 100 வார்டுகள் கொண்ட மாநகராட்சியாக உருவெடுத்துள்ளதன் காரணமாக கூடுதலாக ஒரு மண்டலம் உருவாக்கப்பட்டு அம்மண்டலத்திற்கு உதவி ஆணையர், நிர்வாக அலுவலர் உள்ளிட்ட மண்டல நிலை அலுவலர் மற்றும் பணியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு கூடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் மாமன்றச் செயலாளர் பணியிடத்திற்கான கூடுதல் பணிகளை மேற்கொள்வதற்கு கூடுதல் ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்பதுடன் சட்ட அலுவலர் (முழு கூடுதல் பொறுப்பாக) பணியினையும் கவனிப்பதுடன் வழக்குகள் தொய்வின்றி நடைபெற எல்லா வகையிலும் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்து மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதால் மன்ற செயலாளர் பதவியின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் அதிகரித்துள்ள காரணத்தினாலும் மன்றச் செயலாளர் பதவிக்கு அடுத்த பதவி உயர்வு இல்லை என்பதாலும், இப்பதவியில் பணிபுரிபவர் பணிஓய்வு பெறும்வரை ஒரே பதவி வகிக்கும் நிலை உள்ளதாலும் பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு IBல் வகைப்படுத்தப்பட்டுள்ள மன்றச் செயலர் பணியிடத்தினை IA வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பணியிடங்களுக்கு இணையாக

தரம் உயர்த்தியும் தரஊதியத்தை ரூ5400 லிருந்து 6600 ஆக மாற்றியமைத்து அவ்வாறு உயர்த்தப்படுகிற ஊதிய விகிதத்தை தற்பொழுது மன்றச் செயலாளராக பணியாற்றும் திரு.பா. ராஜசேகர் அவர்களுக்கு நடைமுறைப்படுத்தவும் அரசாணை (நிலை ) எண் 137, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந. 3) துறை நாள் 8.10.2016ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து, வகுப்பு II பணியிடங்களான மாமன்றச் செயலாளர், சட்ட அலுவலர், நிர்வாக அலுவலர், கணக்கு அலுவலர் மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் ஆகிய பதவிகளில் கணக்கு அலுவலர் மற்றும் நிர்வாக அலுவலர் பணியிடங்களுக்கு மட்டும் பதவி உயர்வு பெறும் வகையில் பணி விதிகள் உள்ளதாலும், மாமன்ற செயலாளர் பணியிடத்திலிருந்து பதவி உயர்வு வழங்க மாநகராட்சி பணி விதிகளில் வழிவகை இல்லை என்பதாலும் தமிழ்நாடு மாநகராட்சிகள் பொதுப்பணி விதிகள் 1996 – வகுப்பு II, வகை I ல் உள்ள கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்றச் செயலாளர் பதவியை தன்பொருட்டு வகுப்பு I ல் உள்ள உதவி ஆணையர் நிலைக்கு தரம் உயர்த்தி அதற்குரிய தர ஊதியமாக ரூ.5700/– ஐ வகுப்பு II ல் திரு. ஆ. அமல்ராஜ் இரண்டு ஆண்டுகள் பணிக்காலம் முடித்த 28.10.2013 முதல் முறைப்படுத்தி உத்திரவிடுமாறு கோரியுள்ளார்.

தமிழ்நாடு மாநகராட்சிகள் பொதுப்பணி விதிகள் 1996 – வகுப்பு II, வகை I ல் உள்ள மாமன்றச் செயலாளர் பதவியில் இருந்து உதவி ஆணையர் பதவி உயர்வு பெற விதிகளில் வழிவகை இல்லை. வகுப்பு II ல் உள்ள கணக்கு அலுவலர் மற்றும் நிர்வாக அலுவலர் பணியிடங்களில் இருந்து பணி மூப்பு அடிப்படையிலும் காலிப்பணியிட அடிப்படையிலும் இம்மாநகராட்சியில் உதவி ஆணையர்களாக அரசாணை (ப) எண் 682 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.4) துறை, நாள்.23.11.2015 மற்றும் அரசாணை (ப) எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.4) துறை, நாள்.27.02.2019ன்படி பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

25.10.2011 க்கு முன்னர் 72 வார்டுகளைக் கொண்டிருந்த கோயம்புத்தூர் மாநகராட்சி 11 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து விரிவாக்கம் செய்யப்பட்டதன் அடிப்படையில் 100 வார்டுகளாவும், 5 மண்டலங்களாகவும் பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதனால் மாமன்ற செயலாளர் பணியிடத்தின் பொறுப்புக்களும் பணிகளும் இருமடங்காக உயர்ந்துள்ளது. மேலும் திரு. ஆ. அமல்ராஜ், மாமன்ற செயலாளர் 27.10.2011 முதல் மாமன்ற செயலாளராக ஒரே பதவியில் பணிபுரிந்து வருவதுடன் சட்ட அலுவலர் பணியிடத்தையும் முழு கூடுதல் பொறுப்பாக கவனித்து வருகிறார்.

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதால் மன்ற செயலாளர் பதவியின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் அதிகரித்துள்ள காரணத்தினாலும் மன்ற செயலாளர் பதவிக்கு அடுத்த பதவி உயர்வு இல்லை என்பதாலும், இப்பதவியில் பணிபுரிபவர் பணிஓய்வு பெறும்வரை ஒரே பதவி வகிக்கும் நிலை உள்ளதாலும் பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு IBல் வகைப்படுத்தப்பட்டுள்ள மன்றச் செயலர் பணியிடத்தினை IA வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பணியிடங்களுக்கு இணையாக தரம் உயர்த்தியும் அப்பதவிக்கான ஊதியவிகிதத்தை ரூ.15600–39100 + தரஊதியம் 5400 லிருந்து ரூ.15600–39100+தரஊதியம் 6600 என மாற்றியமைத்து அவ்வாறு உயர்த்தப்படுகிற ஊதிய விகிதத்தை தற்பொழுது மன்றச் செயலாளராக பணியாற்றும் திரு.பா. ராஜசேகர் அவர்களுக்கு நடைமுறைப்படுத்தவும் அரசாணை (நிலை ) எண் 137, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந. 3) துறை நாள் 8.10.2016 பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநகராட்சிகள் பொதுப்பணி விதிகள் 1996 வகுப்பு II ல் உள்ள மாமன்ற செயலாளர் பணியிடத்தில் இருந்து பதவி உயர்வு பெற பணிவிதிகளில் வழிவகை இல்லை என்பதாலும், தனியர் திரு. ஆ. அமல்ராஜ் தொடர்ந்து 9 ஆண்டுகளாக பதவி உயர்வு வாய்ப்பு இல்லாமல் மாமன்ற செயலாளர் பணியிடத்தில் பணிபுரிந்து வருவதாலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் எல்லை விரிவாக்கத்தினால் கூடுதலாக ஏற்பட்டுள்ள மன்ற செயலாளர் பணிக்கான கடமைகள் மற்றும் பொறுப்புகள் அடிப்படையில் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும் தனியர் திரு. ஆ. அமல்ராஜ், மாமன்ற செயலாளர் பொருட்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் பொதுப்பணி விதிகள் 1996 வகுப்பு IIல் உள்ள மாமன்ற செயலாளர் பணியிடத்திற்கு தனியர் மாமன்றச் செயலாளர் பணியில் இரண்டு ஆண்டுகள் பணி முடித்த 28.10.2013 முதல் அப்பதவிக்கான ஊதியவிகிதத்தை ரூ.9300–34800 தரஊதியம் 5100 லிருந்து ரூ.9300–34800 தரஊதியம் ரூ.5700 என மாற்றியமைத்து அவ்வாறு உயர்த்தப்படுகின்ற தர ஊதிய விகிதத்தை தற்பொழுது மன்றச் செயலாளராக பணிபுரியும் திரு. ஆ. அமல்ராஜ் அவர்களுக்கு நடைமுறைபடுத்த கோரியதை ஏற்ற உரிய உத்திரவு கோரி பரிந்துரைத்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் வழியாக அரசிற்கு கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

இம்மாநகராட்சியின் மாமன்றச் செயலாளர் பதவியை தனியர் திரு. ஆ. அமல்ராஜ், மாமன்றச் செயலாளர் பொருட்டு ரூ.9300–34800 தரஊதியம் 5100 லிருந்து ரூ.9300–34800 தரஊதியம் ரூ.5700 என உயர்த்துவதன் மூலம் வழங்கப்படவிருக்கும் உயர்த்தப்பட்ட ஊதியத் தொகை காரணமாக ஏற்படும் செலவினத்தையும் சேர்த்தால் இம்மாநகராட்சியின் ஊதியத்திற்கான மொத்த செலவின தொகை மொத்த வருவாயுடன் ஒப்பிடும்போது அனுமதிக்கப்பட்ட 49% க்குட்பட்டே இருக்கும்.

அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கலாம். மாமன்ற ஒப்புதலுக்குப்பின் நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு பரிந்துரைத்து கருத்துரு அனுப்பலாம்.

**(ந.க.எண்.1740/2020/எம்சி2)**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 286 நாள் 29.05.2020</u>**

பொருளின் பத்தி எண்கள் 7 மற்றும் 8ல் "ரூ.9300–34800 தரஊதியம் 5700 என குறிப்பிடப்பட்டுள்ளதை ரூ.15600–39100 தரஊதியம் 5700" என திருத்தம் செய்தும் அலுவலகக்குறிப்பிற்கு ஒப்புதல் அளித்தும் தீர்மானிக்கப்பட்டது.

---

(ஒப்பம்) ஜெ.ஷ்ரவன்குமார், இ.ஆ.ப.,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி